ஓம்,

பரப்பிரஹ்மணே நம:

போதவிளக்கம்



ஸ்ரீமத் தே. அ. சாமிகுப்புசாமியவர்களால்

இயற்றப்பட்டது.

1930



ஓம்,

தத்சத்,

பரப்ரஹ்மணே நமஃ.

போதவிளக்கம்.

இது

திருத்துருத்தி, இந்திரபீடம்,

ஸ்ரீ கரபாத்திர சுவாமிக ளாதீனம்,

ஸ்ரீ, ஈசூர், சச்சிதாநந்தசுவாமிகளின்திருவடித்தொண்டரும்,

39 - ஆவது பட்டாளம் சுபேதார் மேஜராயிருந்தவருமாகிய

ஆத்மஞானி,

ஸ்ரீ, ஐயாக்கண்ணு தேசிகமூர்த்திகளின்

பாதசேகரர்,

ஸ்ரீமத், தே, அ, சாமி குப்புசாமி அவர்களால்

இயற்றப்பட்டு,

சென்னை, கோமளேசுரன்பேட்டை,

ஆசிரியர்,

ஸ்ரீமத், கோ, வடிவேலு செட்டியாரவர்களால்

பார்வையிடப்பட்டு,

இந்நூலாசிரியரின் திருவடித்தொண்டர்,

காளத்தி, இ, சிதம்பரசாமி புராணிகரால்

சென்னைக்

கந்தன் பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.

இரண்டாம் பதிப்பு.

[விலை அணா 2.]

போதவிளக்கத்தின் அநுக்கிரமணிகை.


வரிசை எண்.		பக்க எண்
க.	முகவுரை.	க
உ.	சாத்து கவிகள்.	ங
ங.	சிறப்புப்பாயிரம்.	உஉ
ச.	அரும்பதவுரை.	உஎ
ரு.	பாயிரம்.	க
சா.	நூல்.	ரு
எ.	உடற்பய னுறுக வுத்தமர்க் கேயெனல்.	
அ.	பேத நோக்கம் பெயரும் வகைசொலல்.	
கூ.	துய்பர் முதலியோர் தொழினிலை கூறல்.	ரு
க0.	நிஜவடி வடைய நெஞ்சொடு கிளத்தல்.	
கக.	கழிந்தநாட் பற்றிக் கருத்தழிந் திரங்கல்.	அ
கஉ.	நிலையி னிற்க நெஞ்சிற் குணர்த்தல்.	கூ
கங.	உலகினர் துயர்கண் டுள்ள மிரங்கல்.	
கச.	அபர ஞான மறுதி யன்றெனல்,	க0
கரு.	அடாஞா னியரி னநுசிதம் பகர்தல்,	
கசா.	பொய்யர் கொள்வது போலிவே டம்மெனல்.	கக
கஎ.	போலிப் புலவரின் புன்செயல் கூறல்.	கஉ
கஅ.	பந்தநீங் குபாயப் பகுப்பினைப் பகுத்தல்.	கங
ககூ.	நிட்கா மியத்தா னேர்பய னுரைத்தல்.	கச
உ0.	உளமயக் ககல வுள்ள துணர்த்தல்.	
உக.	புன்புல வர்க்குப் பொருளுரை புகறல்.	கசா
உஉ.	அடங்கா தாரியல் பகல வியம்பல்.	கஎ
உங.	உறுதுயர் விளைக்கு முடலிழி வுரைத்தல்.	கஅ
உச.	உலக நோக்கறு முபாயங் கூறல்.	
உரு.	அடங்காதார்க் கமைவுரை யன்போடிசைத்தல்	ககூ
உசா.	நெஞ்சிற் கமைவுரை நேர்மையா நிகழ்த்தல்.	
உஎ.	போலிச் சைவர்க்குப் பொருளுரை வகுத்தல்.	உ0
உஅ.	வைணவர்க் குறுமொழி வாய்ப்புறக்கிளத்தல்	
உகூ.	தற்காப் பெவர்க்குஞ் சாதன மாமெனல்.	உக
ங0.	சைவ நெறியே யுய்யு நெறியெனல்.	
ஙக.	கற்றறி விலோர்க்குக் கழறி யுரைத்தல்.	
ஙஉ.	வைராக் கியத்தால் வரும்பல னுரைத்தல்.	
ஙங.	ஞான மெளிதி னணற்கே துரைத்தல்.	உஉ
ஙச.	பொன்று நிலைபெற புலவர்க் குணர்த்தல்.	
ஙரு.	சற்குரு மொழியின் சதாப் பாடு.	உகூ
ஙசா.	அனுக்கிரக மாட்சியி னமைவைப் பாவல்.	ங0
ஙஎ.	உபதேசப் பாகுபா டுணரக் கூறல்.	

வரிசை எண்.		பக்க எண்
ந௮.	மஹான்க ணிலைசொல வாம்புண் டோவெனல்.	ந௨
நகூ.	மாயா சொரூப வகையினை நவிற்றல்.	
சO.	மாயையை யகற்று மாண்பினைக் கூறல்.	நச
சக.	அனுபவ மாட்சியி னமைவினை யறைதல்.	
சஉ.	திருவடித் தியானஞ் செயும்வகை செப்பல்.	
சந.	சிவதரி சனத்தின் செந்நெறி கூறல்.	
சச.	கிருத கிருத்திய னென்பது கிளத்தல்.	ந௮
சரு.	முடிவுரை.	
சசு.	விவேக சட்கம்.	நகூ

பிழை திருத்தம்.

(கரு) ஆவது பக்கம் (அO) ஆவது செய்யுள் மூன்ருவது வரியில் வெட்டவெளியாகத் என்றிருப்பதனை வேதகமே தோன்றுங் என்று திருத்திக் கொள்க.






திருத்துருத்தி, இந்திரபீடம், ஸ்ரீ, கரபாத்திர சுவாமிகளாதீனம்,

ஸ்ரீ, பிறைசை, அருணாசல சுவாமிகளின் மாணவர்,


ஸ்ரீ, சச்சிதாநந்த சுவாமி.



திருத்துருத்தி, இந்திரபீடம், ஸ்ரீ, கரபாத்திர சுவாமிகளாதீனம்,

ஸ்ரீ, ஈசூர், சச்சிதாநந்த சுவாமிகளின் மாணவர்.

ஸ்ரீமத், ஐயாக்கண்ணு தேசிகமூர்த்தி.



திருத்துருத்தி, இந்திரபீடம், ஸ்ரீ, கரபாத்திர சுவாமிகளாதீனம்,

ஸ்ரீ, ஐயாக்கண்ணு தேசிகமூர்த்திகளின் மாணவர்

ஸ்ரீமத், தே, அ, சாமி குப்புசாமி.



உ

முகவுரை.

"பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ்
செம்பொருள் காண்ப தறிவு."

முன்னூற்கள் பலவற்றையும் பரிந்து கற்று, மேலுங் கற்கப்படுவன உளவோவென்று தீப்பற்றப்பெற்றவன் தண்ணீரைத் தேடுதல் போல, அவற்றைத் தேடி அதிதீவிரத்தோடு கற்று, அவற்றுள் நீர்பிரித் தன்னமுண்ணுந் தூய தீம்பால் போலச் சுருதி யுக்தி யனுபவத்திற்கு இயைந்தவற்றைக்கொண்டு இயையாதனவற்றை நீக்கி, பழைமையென்றும் புதுமையென்றும் பாரபட்சம் பாராது நியாய நெறியிற் செல்லும் கல்வி கேள்வி அறிவு ஒழுக்கங்களிற் சிறந்த விவேகிகட்கு விண்ணப்பம் :—

பரமேசுவரனது திருவருட் பாங்கால் தத்தம் பூர்வ கர்மத்திற்கேற்றவாறு தநு முதலியவற்றைப் பெற்றுள்ள ஜீவகோடிகளுள் கரண சம்பந்தமுடைய ஒவ்வொன்றும், துக்க நீக்கத்தையும், சுகத்தின் பெருக்கத்தையும், விரும்புவ தியல்பா மென்பது உணர்வுடையார் யாவராலும் ஒப்பப்பட்டதொன்றாம்; அத்துக்க நீக்கமும், சுகத்தின் பெருக்கமும் உண்டாவதற்குக் கருவிபல இருப்பனவாகக் காணப்படினும், அவற்றாலவை செவ்வனே சம்பவிப்பது கூடாமையா யிருத்தலின், அவற்றிற்குரிய தக்க சாதனத்தை யாராய்ந்தடைவது மனிதப் பிறப்பிலன்றி வேறு பிறப்பி லமையாதென்பது திண்ணமாம். சர்வதுக்க நிவிர்த்திக்கும், பரமாநந்தப் பிராப்திக்கும் தக்க சாதனம், தத்துவ ஞானமா யிருத்தலின், அதனை அனுபவமுடைய தேசிகர் வாயிலாக வடைந்து சர்வ துக்க நிவிர்த்தியும் பரமாநந்தப் பிராப்தியும் அடைவதே மனிதப்பிறப்பின் முக்கியப் பயனும். இத்தகைய தத்துவ ஞானத்தில் விருப்பமுண்டாதல் மிகவும் துர்லபமாமென்பது மிகு பிரசித்தமாம். ஏதோ தமியேன் பூர்வ புண்ணிய விசேஷத்தால் திருத்துருத்தி - இந்திர பீடம் - ஸ்ரீ. கரபாத்திர சுவாமிக ளாதீனம்-ஸ்ரீ. ஈசூர். சச்சிதாநந்த சுவாமிக

ளின் திருவடித் தொண்டர் 39-ஆவது பட்டாளம் சுபேதார் மேஜரா யிருந்த ஆத்மஞானி, ஸ்ரீ. ஐயாக்கண்ணு தேசிக மூர்த்தியின் வாயிலாக வடைந்த தத்துவ ஞானத்தைப்பற்றியும், அதன் சாதனங்களைப்பற்றியும், அத் தத்துவ ஞானத்தாலாம் பயனைப் பற்றியும், என் கல்வியறிவிற் கேற்றவாறுகச் சில வெண்பாக்களியற்றி வைத்திருந்தேன். அவற்றை ஒரு சமயம், திருவருட்பிரகாச வள்ளலார் மரபு - காஞ்சீபுரம், ஸ்ரீ நிச்சல இராமாநந்த சுவாமிக ளவர்கட்குக் காட்ட நேர்ந்தபோது, அவர் அவற்றை யூகித்து நோக்கி, இவை வேதாந்தார்த்தங்களைச் செவ்விதின் விளக்குவனவாயிருத்தலின், இவை போல இன்னுஞ் சில வெண்பாக்க ளியற்றி, எல்லாவற்றையுந் திரட்டி ஓர் நூலாக வெளியிடின், அது சாதக ஜனங்கட்கு உபகாரமா யிருக்குமெனக் கட்டளையிட, அதைச் சிரசாவகித்து அங்ஙனமே யியற்றி அவற்றிற்குப் போதவிளக்கமெனப் பெயர் தந்தனன். ஒத்துமுறைவைப்பாக 40-விஷயங்களாகப் பிரிக்கப்பட்டுப் பாயிர முட்பட 278 - செய்யுட்களடங்கிய இந்நூலைச் சென்னைக் கோமளேசுவரன்பேட்டை ஆசிரியர். ஸ்ரீமத். கோ. வடிவேலு செட்டியாரவர்கள் பரிசோதித்துத் திருத்திக் கொடுத்தனர். அவர்கள் இது விஷயத்திற் செய்த பேருதவி ஒருபோதும் மறக்கத் தக்கதன்றுப். இப்புத்தகத்திற் பிழையிருப்பின், புவி பொறுக்க.

இப்புத்தக விற்பனையால் வரும் பணம் சென்னை-சூளை-குயப்பேட்டை யென வழங்கும் சண்முகஞான புரத்தில் திருக்கோயில் கொண்டு வீற்றிருக்கும் ஸ்ரீ - ஈசூர். சச்சிதாநந்த சுவாமிகள் தைப்பூச குருபூஜைக் குதவப்படும்.

சச்சிதாநந்த சங்கம்,
நெ. 36, வெங்கடேச பத்தன் வீதி,
பெருமாள்பேட்டை,
வேப்பேரி போஸ்டு, சென்னை.

இங்ஙனம்,

தே, அ, கு.



ஓம்

தத்சத்

பரப்ரஹ்மணே நம:.

சாத்துகவிகள்.

சென்னை, ஹிந்து தியலாஜிகல் ஹைஸ்கூல்

சம்ஸ்கிருத பண்டிதர்

பிரஹ்ம ஸ்ரீ. டி. வி. அப்பாசாமி சாஸ்திரியாரவர்க

ளியற்றியருளிய

சுலோகம்.

బోధప్రదీపికా సమ్యగామూలాగ్రం నిరీక్షితా।
వేదాంతతత్త్వ సంపూర్ణా సుఖదా కౌముదీవనః॥
సర్వోపనిషదామత్ర గూఢో ర్థోభి విరాజతే।
పఠనాదేవ సర్వేషాం తత్త్వజ్ఞానం దదాతి చ॥
సచ్చిదానంద విదుషః శిష్యప్రశిష్యేణ ధీమతా।
రచితాకుప్పునాథేన జీయాదాచంద్రతారకమ్॥

1. போத விளக்கமென்னும் புத்தகம் ஆமூலாக்ரம் வரை, செவ்வனே பார்க்கப்பட்டது; அது வேதாந்த தத்துவங்களால் நிறைந்ததாயும் சந்திரிகையைப்போன்று விஷயங்களைப் படிப்பவர்க்குச் சுகத்தைக் கொடுப்பதாயு மிருக்கிறது.

2, இதன்கண் சர்வோப நிஷத்துக்களின் கூடார்த்தம் நன்றாய்ப் பிரகாசிக்கின்றது; அது படித்த மாத்திரத்திலேயே தத்வ ஞானத்தை யாவருக்கும் விளக்குவதாம்.

3. இப்புத்தகம் சச்சிதாநந்த சுவாமிகளது சிஷ்யப்பிரசிஷ்யராகிய குப்புசாமிபண்டிதரால் செய்யப்பட்டது; ஆசந்திரதாரகம் (சந்திரநட்சத்திரங்களுள்ள பரியந்தம்) நிலை பெற்று விளங்குக.

ஜகத்குருபீடம்
நியாயசந்திர வேதாந்த பாஸ்கரநும்
ஸ்ரீ. ஆத்மபுராண ஸ்ரீ. பகவத்கீதா கூடார்த்த தீபிகை
முதலிய நூல்களின்
மொழிபெயர்ப் பாசிரியருமாகிய ஸ்ரீமத். மகாமண்டலேசுவர வீரசேகர
சுப்பைய ஞான தேசிகேந்திர சுவாமியவர்களியற்றிய

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

நாதவிளக் கம்புரிந்தா ராயிரமீர் நாவுடையார் நாத மோதி, நீதிவிளக் கம்புரிந்தார் மனுமுதலா முனிவர்க ணீதி மேவிச், சீத விளக் கம்புரிவார் செம்பொருளே பொருளாவார் சிறப்புற் றோதப், போதவிளக் கம்புரிந்தான் சாமிகுப்புசாமியெனும் புகழ்வல் லானே.

திருவருட்பிரகாச வள்ளலார்மரபு.

ஸ்ரீமத். காஞ்சீபுரம்-நிச்சல-இராமாநந்த சுவாமிகள்
இயற்றியருளிய

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

பொன்னிகர் தன்னைப் பொருந்தியின் புறவும் பொய்யிரு ளகல வு ஞான, மன்னிய வேத முடிவினி லிலங்கு வானமு தள்ளியே தெளித்தான், றுன்னிலத் துயிர்க ளெனும்பயிர் தழைக்கத் துரிசறு மேகமே யென்ன, வன்னவன் றேனும் பேட்டையங் கப்ப னருந் தவச் செல்வனைத் தோன்றி. (க)

பன்னிருசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

திருத்துருத்தி யிந்திரபீ டங்காபாத் திரர்மரபு
செழிக்க வெங்குந்
திகழருளா நந்தவமு தனைவிடவே றிலையென்றுந்
தேர்ந்தோன் வேறாய்
விரித்தொருவர் மறித்தாலுங் கலக்கமுறா தன்னவர்க்கு
விளங்கச் சீர்சால்
விமலபரம் பொருளிதெனச் சுருதியுத்தி யநுபவத்தால்
விளக்குந் தீரன்
கருத்தொருமித் தடுத்தவர்கைக் கனியென்னச் சொரூபநிலை
காட்டுங் கையான்
கவலையறப் பேரின்பக் கடலழுந்திப் பிரிவற்றுக்
கலந்தொன் றானோன்
பொருத்தமற்ற துவிதமறப் பூரணமா மத்துவிதப்
பொருப்பில் வாழ்வோன்
பொறுமைதய வீதலொடு நற்குணமா தியவெல்லாம்
பொருந்து மேலோன். (உ)

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

புண்ணியஞ் சேர்ந்த பக்குவ ருலகப் பொய்யகன் றுண்மை பெற் றுய்வா, னெண்ணிய போத விளக்கமொன் றிசைத்தா னெழில்பெருஞ் சோதியா ரையாக், கண்ணெனு மாசா னடிமல ரணிந்தே கருவொழித் தறிவுருப் பெற்ற, திண்ணியன் சச்சி தானந்தன் மரபிற் றிகழ்குப்பு சாமிநா வலனே. (௩)

இராமாநந்த யோகிகளென்னும் மஹா வித்வான்

ஸ்ரீமத். கா. இராமசாமி நாயுடவர்கள்

இயற்றியருளிய

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்,

உப்புச்சா கரம்புடைசூ ழவனியின்க ணுற்பவித்த வுரவோர் யாருந், தப்புச்சா ரும்வழியி னடவாம றன்னிலையைத் தாமுற் றுய்ய, வொப்புச்சாற் றற்கரிதாம் போதவிளக் கம்மெனுநூ லுரைத்தான் சீர்சால், குப்புச்சா மிப்புலவன் சொற்கண்டு பய மெனவே கூறு வாமே.

சமிவன க்ஷேத்திரமென்னும் கோவிலூ ராதீனம்

ஸ்ரீமத். வீரசேகரமெய்ஞ்ஞானதேசிக சுவாமிகளின் மாணாக்கர்களு

ளொருவராகிய ஸ்ரீமத். அடைக்கல சுவாமிகளென்னும்

ஸ்ரீமத். அறிவாநந்த சுவாமியவர்கள்

இயற்றியருளிய

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

நாத விளக்கஞ் சொற்சுவைக ணுடிற் சிறிதுங் குறைவின்றி
யோத விளக்க முறுவெண்பா விருநூற் றெழுபத் தொன்பதெனு
மேத விளக்க மின்றியவெ ணியன்றிவ் வுலக முயுமாறு
போத விளக்க முறவிருளைப் போக்கும் பானு வெனவந்நூல். (க)

வேறு

உலகில்புகல் கலையெவற்றின் முடிப்பொருள்க ளிதனினனி யுற்று நோக்கி, லிலகுதலி னக்கலையெ லாந்திரண்ட பொக்கிஷமென் றியம்பற் கைய, நிலவவிலாப் புகழ்ப்போத விளக்கமெனும் வெண் பாநூ னிலைக்கத் தந்தா, னலகில்குணக் கவிஞன்குப்புச் சாமிபபி தானத்தா னருமை மாதோ. (உ)

திருவருட்பிரகாச வள்ளலார் மரபு, காஞ்சீபுரம்
ஸ்ரீமத். நிச்சல - இராமாநந்த சுவாமிகள் மாணுக்கருளொருவராகிய

ஸ்ரீமத் - சொரூபாநந்தமணி சுவாமிகளியற்றிய

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

சீர்பூத்த கலைமகளு மலர்மகளுஞ் செறிந்தோங்குஞ்
சென்னை வாழ்வோ
னேர்பூத்த திருத்துருத்தி மால்பீடங் காபாத்ர
னெழிலா தீனத்
தேர்பூத்த வருட்சச்சி தாநந்த னடிமலரைச்
சிரத்திற் றாங்கிப்
பேர்பூத்த வையாக்க ணெனும்பெருமா னருள்பெற்றுப்
பிறங்குந் தூயோன். (க)

கனமிகுமெய் யறிவுடையோன் பொறைமுதலாங் குணநிறைந்தோன்
கவலை தீர்ந்தோன்
றனிமிகுமித் தேகாதி கரணமறத் தனையுணர்ந்து
துரிய மோனத்
தனமிகுசொச் சொரூபசுக முற்றதுவா யுலகொத்துத்
தழைத்து வாழ்வோன்
நனிமிகுமோர் மொழியமுதா லருளுருவந் தனையடைந்த
நண்ப னன்பால். (உ)

பலமலரின் மகரந்தங் கவர்ந்தளிக ளுலகளிக்கும்
பான்மை போன்று
புலமிகுசொன் மணமுடனே பொருண்மணமுங் கமழநிவோர்
புகழ்வே தாந்த
நலமணங்கொ ளருள்போத விளக்கமென நானிலத்தோர்
நண்ணத் தந்தான்
மலமகன்ற சாமிகுப்பு சாமிரா வலன்றிறத்தை
வழுத்தற் பாற்றே. (ந)

சென்னை - யோகாநந்தாஸ்ரமம்-சமரஸஞான சங்கத்தலைவர்
கோவிலூர்ப் பரம்பரை

ஸ்ரீமத். ஷண்முகாநந்த சுவாமிகளியற்றியருளிய

நேரிசை வெண்பா,

பேதமறப் போதமுறப் பேறிவைப் பெற்றுயவும்
போத விளக்கம் புகன்றனற்—சீதமுற்ற
வப்புக் குயர்குணத்தா னையாக்க ஞரியன்சேய்
குப்புச்சா மிப்புலவன் குக்கு.

திருவொற்றியூரிற் சதாநிட்டரா யெழுந்தருளியிருக்கும்

ஸ்ரீமத். அருளாநந்த சுவாமிக ளியற்றியருளிய

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

பற்பல சுருதி யாதி பணித்திடும் பொருளை யெல்லா
மெத்திசை யோர்க ளுங்கண் டேத்துதற் கிலக்கா நின்ற
முற்றவ வலியாற் போத விளக்கமா மொழுகு றன்னை
நற்றவக் குப்பு சாமி நவின்றனன் ஞால மீதே.

புலத்தியபுரமென்னும் போரூரின்கண் ணெழுந்தருளியிருக்கும்
மஹான்-ஸ்ரீ. பாலாநந்தசுவாமிகளின் பாதசேகராகிய

ஸ்ரீமத். ஆதிமூலசுவாமிகளியற்றியருளிய

நேரிசை வெண்பா.

வேத முடிவின் விழுப்பொருளைக் காட்டுமொரு
போத விளக்கம் புனைந்தளித்தா—னீதமிகு
குப்புசா மிப்பேர்கொள் கோமான்மற் றன்னவனுக்
கிப்புவிசெய் கைம்மாறீண் டென்.

சமரசவேதசன்மார்க்கசங்கத்து
வித்துவான்களிலொருவரும்
சைவபுராணிகருமாகிய

ஸ்ரீமத். பொ. சுந்தரம்பிள்ளையவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

சித்தாந்தம் வேதாந்தஞ் செப்புதத்து வாந்தமுடன்
புத்திவள ராறந்தப் போதவிளக் - கத்தாலா
முண்மையுல கோர்தேர்ந் துயக்குப்பு சாமிதந்தா
னிண்மையுற வெங்நாளுந் தேர்ந்து.

மதுரைத் தமிழ்ச்சங்கத்து வித்துவான், சித்தாந்தசரபம்
அஷ்டாவதானம், பூவை
ஸ்ரீமத். கலியாணசுந்தர முதலியாரவர்களியற்றிய
நேரிசை வெண்பா.

ஓதரிய வத்துவித வுண்மை நிலையறிந்து
போத விளக்கம் புகன்றானு—னீதமுற
விப்புவியிற் சாந்தகுண மீகைதயை யேவாய்ந்த
குப்புசா மிப்பெயர்கொள் கோன்.

முத்தமிழ்ரத்நாகரம்
சைவஸ்ரீ. ம. தி. பாநுகவியவர்களியற்றிய
எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

ஈசனை யுணர்ந்தோர் தம்முளில் வரைந்த
வியல்புறு மத்துவி தத்தி
னேசனென் றெவருந் தனையுணர் பாக்கு
நிகழ்த்தினன் போதநல் விளக்க
மாசறு தனது நிலைமையை யவாவு
மாண்பினோர் படித்தக மகிழ
மாசகம் புகழுங் குப்புசா மிப்பேர்
மன்னிய வின்னிசை யோனே.

ஸ்வகீயாநந்தயோகிகளென்னும்
பொதிகைமலைச்சித்தர் பொன்னடிக்காளாகிய
ஸ்ரீமத். ஞாநாநந்தநாதமுனிசுவாமிகள்
மாணுக்கர்களுள் ஒருவராகிய
வேதாந்த வித்வத் சிரோமணி
ஸ்ரீமத். ல. நாராயணசாமி நாயகரவர்கள்
இயற்றிய
நிலைமண்டலவாசிரியப்பா.

உரைமனங் கடந்த வொருதனிச் சித்தெனப்
பரம்பழம் பொருளெனப் பகர்தரு சுத்தப்
பிரமமாஞ் சருவ சாட்சிதண் ணருள்செயச்
சச்சிதா நந்த சுவாமியா யபின்ன
வுச்சிதத் தன்மய முணர்ந்தவைம் பேதப்
பொருடரு பிணிபொய்ப் போத வலக்கணற்

றருவினை கடிந்த வையாக் கண்ணனுஞ்
சாமிகட் கடியனுந் தமஞ்செய லவித்தைக்
காமியல் பதனு லழிபோகத் தழுந்துயிர்
போத விளக்கம் பொருந்தவப் பெயர்கொ
ணூல்செய் தழிவறு கோன்பினை முடிப்பார்க்
களித்தனன் றேனும் பேட்டையி லமர்வோன்
குப்பு சாமியென் குணக்குன் றறையி
லிப்புவி வாழுநர்க் கிணையிற் றுணைவனே.

ஸ்ரீ. ஈசூர். சச்சிதாநந்த சுவாமிகளின் பிரதம மாணக்கராகிய

ஸ்ரீமத். அ. முனிசாமி நாயகரவர்கள்

இயற்றிய

நேரிசை வெண்பா.

அய்பாக்கண் ணென்னுமொரு வாரியனுர் தம்மருளான்
மெய்யாகப் போத விளக்கமதைப்- பொய்மாறத்
தீட்டிமுடித் தச்சிட்டான் றீரன்றே னும்பேட்டை
நாட்டிலுறை குப்புசாமி நன்கு.

ஸ்ரீ. ஈசூர் சச்சிதாநந்த சுவாமிகள் மாணக்கர்களுளொருவர்

ஸ்ரீமத். பி. ஆறுமுக முதலியாரவர்களியற்றிய

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

ஏதமிலா தொளிருமறைப் பொருள்விளக்க மிஃதெனநின் றோர்ந்து தேர்ந்து, பேதமிலா தொளிர்போத விளக்கமெனு நூலொன்று பிறங்கச் சொற்றுன், பாதமிலா தொளிர்ஞான நிட்டனையாக் கண்ணனடி பரிவிற் சார்ந்த, கோததிலா தொளிர்பரம நிட்டன்குப்பு சாமியெனுங் கோமான் மாதோ.

ஸ்ரீ. ஈசூர், சச்சிதாநந்த சுவாமிகள் மாணக்கர்களுளொருவர்

ஸ்ரீமத். தே. மாணிக்க சுவாமிகளியற்றிய

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

திருமறைசொ லிருகாண்டத் தபேத வாதா
தியந்தமுணர்ந் தழியாசா தனத்திற் றேர்ந்து
நிருவிகற்ப சாந்ததயா நிதிய டைந்து
நேர்ந்திடுதின் சுயவுழைப்பா லுலக மெல்லாம்

பரகதியை யதிலேசி லடைய வேண்டிப்
பகர்சீவ காருண்ய முள்ளத் தூன்றி
யொருபோத விளக்கமெனு ஞான நூலை
யொண்குப்பு சாமிநா வலன்சொற் றனல்.

ஸ்ரீ. ஈசூர். சச்சிதாநந்த சுவாமிகள் மாணுக்கரும்
ஜாதி சமயாசார விளக்கமாதி நூலாசிரியருமாகிய
வியாசர்பாடிச் சாமியெனவழங்கும்

ஸ்ரீமத். ஆ. சின்னையா முதலியாரவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

வேதாந்தத் துண்மை விளங்கலரி தாமென்றே
போதானந் தம்பெற்றோர் போதிப்பர் - போதத்தைப்
போத விளக்கமெனப் புண்ணியன்குப் புச்சாமி
சாதகமா கச்செய்தான் றான்.

ஸ்ரீ. சாது - இரத்தின வேதாந்தசபையின்
அங்கத்தினருளொருவராகிய
தர்க்கவேதாந்த போதகாசிரியர்

ஸ்ரீமத். வே. முருகேச முதலியாரவர்களியற்றிய

நேரிசை வெண்பா,

சிற்சொருப நானென்று செவ்விதா யோர்ந்துணர்ந்த
நற்குப்பு சாமியெனு நாவலவன் - சொற்றிட்டான்
போத விளக்கமெனும் புத்தமுத நூலொன்றைப்
பேதமய னீங்குநெறி பெற்று.

சென்னை. தொண்டைமண்டலர்
துளுவவேளாளர் ஐஸ்கூல்
தமிழ்த்தலைமைப்பண்டிதர்
திருமழிசை - வீரசிம்மாசனமடம்
ஸ்ரீ. சாந்தலிங்கசுவாமிகளாதீனம்

ஸ்ரீமத் * வித்வான் - சிவப்பிரகாசையரவர்கள்

இயற்றிய

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

நண்ணருமைத் திணையவளச் சென்னைநக ரைச்சார்ந்தே னும்பேட் டைவாழ், விண்ணியற்சீர் குப்புசா மிக்குரிசில் செய்போத விளக்க நூனங், கண்ணியற்பார் வைக்குவாக் கண்டனமஃ துபநிடதக் கருத்தை யார்க்கு, மண்ணிதிற்கை வல்லியமா யறிவிக்கும் பான்மைத்தே லறைவ தென்னே.

---

* இவரிப்போது திருப்போரூர் மடாதிபதியாய் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

திருவிசை நல்லூர். வித்துவான்

புராணிகர். ஸ்ரீமத். சிந்நய நாயகரவர்கள்

இயற்றிய

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

நீதம் விளக்கிய மூதறி வோர்மு னிகழ்த்திய நூலாய்ந்தோன், வேத விளக்கமி தென்னவே மிளிர மேறே ணம்பேட்டைப், பேத விளக்கற தற்றிடு குப்பு சாமியெ னும்பெயரோன், போத விளக்க மியற்றின னிப்புவி போற்றி மகிழ்ந்திடவே.

புலத்தியபுரம். பிரமபீடம்

ஸ்ரீ. அச்சுதாநந்த சுவாமிகளின்

மாணுக்கருளொருவராகிய

வல்லநகர். ஸ்ரீமத். வைத்தியலிங்கம் பிள்ளையவர்கள்

இயற்றிய

நேரிசை வெண்பா.

ஆழு மவித்தை யகற்றி யறிவுருவாய்
வாழு மொருநல் வழிகாட்டுஞ் - சூழுஞ்
சளக்கந் தவிர்குப்பு சாமிதரு போத
விளக்க மொளியால் விரிந்து.

சென்னை. கிறிஸ்தியன் காலேஜ்

தமிழ்ப்பண்டிதர்

ஸ்ரீமத். ஈக்காடு. இரத்தினவேலு முதலியாரவர்கள்

இயற்றிய

நேரிசை வெண்பா.

வேத முரைத்த விழுத்த பொருண்முடிவைப்
போத விளக்கப்பேர் பூண்டுலவச் - சீதவயல்
கூடுதே ணம்பேட்டைக் குப்புசா மிக்கோமான்
நாடி யளித்தனனு னன்கு.

பிரசங்கபூஷணம். வித்துவான்

ஸ்ரீமத். ஆ. மே. சென்னகேசவுலு நாயுடவர்கள்

இயற்றிய

நேரிசை வெண்பா.

தப்பென் றுந் தக்கோர் பிழையென் றுந் தாஞ்சொல்ல
விப்புவியின் மற்றையர்க ளின்படையத் - திப்பியமாய்ப்
போத விளக்கம் புகன்றுன்குப் புச்சாமி
யேதென் றிசைப்பே னிதை.

யஸ். பி. ஜி. ஐஸ்கூல். பிரதம தமிழ்ப்பண்டிதர்

ஸ்ரீமத். கா. நமச்சிவாயமுதலியா ரவர்களியற்றிய

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

தானலாற் பொருளில்லை யென்னுமொரு நீதிதனைத் தகவி னோர்ந்து, தேனமரு மொழியதனற் போதவிளக் கம்மென்னச் சிறக்கத் தந்தான், வானமரும் பொழின்மேய தேவனும் பேட் டைவரு மாண்பு மிக்கான், மானமருங் காமுடையோன் றெழு குப்பு சாமியெனு மறிஞன் மாதோ.

சைவசித்தாந்தப் பிரசங்காமிருதம்

ஸ்ரீமத். பெ. கந்தசாமிப்பிள்ளையவர்களியற்றிய

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

தன்னையுணர் வழியதனை யடைந்தார்க்கிங் கறிவுறுத்துந் தகைமை சான்ற, பன்னுமொழி லையாக்கண் ணுங்குரவ னிடமறிந்த பண்பி யாவும், மன்பதையோ ரறிந்துய்யப் போதவிளக் கப்பெயர்நூல் வனைந்து தந்தான், பொன்னியறே னும்பேட்டைக் குப்புசா மிப்பெயர்கொள் புனிதன் மாதோ.

மதராஸ் பியர் ஆபீஸ் டிராபிக் ஓவர்சீயராயிருந்த

வித்துவான்

ஸ்ரீமத். மோசூர். முனிசாமி முதலியாரவர்களியற்றிய

எண்சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

பகாறிய வடமொழியின் சுலோகத் தாலும்
பண்புள்ள நற்றமிழின் கவியி னாலும்
சுகமுறவே வேதாந்த நூலை முன்னோர்
சொல்லிவைத்தா ரஃதறிந்து குப்பு சாமி
தகைமையிலாக் கேவலரு முணரு மாறு
தருபோத விளக்கமெனத் தந்தா னந்தப்
புகலரிய புலமைதனக் குக்கைம் மாறு
பூதலத்தே யாதொன்று புரியு மாறே.

ஷை முதலியாரவர்கள் மாணுக்கரும்
சென்னை. பெரியமெட்டுச் சிவனடியார் திருக்கூட்டத்தின்
காரியதரிசியுமாகிய

ஸ்ரீமத். பெ. மு. சிவஞானசெட்டியாரவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

வேத முடிவில் விளங்கும் பொருளதனைப்
போத விளக்க மெனப்புகன்றான் - தீதில்சீர்
குப்புசா மிக்கவிஞன் கூர்த்த மதிவாண
னெப்புவியு மேத்த வினிது.

ஸ்ரீமத். மயிலை. தணிகாசல முதலியாரவர்கள் மாணுக்கர்
மயிலை. புராணரத்நாகரம்.

ஸ்ரீமத் - நாதமுனிமுதலியா ரவர்களியற்றிய

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

சந்திரன் றவழுஞ் சோலைச் சங்கமார் தேனும் பேட்டைச்
சுந்தரன் குப்புசாமி துதிபெறு கும்ப னன்னான்
சிந்தையைத் துலக்கும் போத விளக்கமென் றொருநூ றன்னைத்
தந்தன னுலக மேற்றத் தமிழ்மக ளுவக்க மாதோ.

மதுரைச்செந்தமிழ்ச்சங்கத்து வித்துவான்
செங்கற்பட்டு

ஸ்ரீமத். அ. அரங்கசாமி நாயகரவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

ஆதவன்போன் மெய்ஞ்ஞான மார்கலிதே யத்துலவப்
போத விளக்கமது பொற்புமிகக் - காதலொடு
குப்புசா மிக்கவிஞன் கோமளமெல் லார்க்குமுறச்
செப்பமதாப் பாடினனாற் றேர்ந்து.

புதுவை. சுலட்சணகவி
ஸ்ரீமத். இராமாநுஜநாவலர் மாணுக்கர்களிலொருவராகிய
ஸ்ரீமத். இராமாயணபாரதாதிபிரசங்கசாகரம்

ஸ்ரீமத். மதுரகவி. ராமாநுஜ பாவலரியற்றிய

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

போதபரி பூரணமாய்த் தன்னுருவைக் கண்டதுவாய்ப் பொலிந் தெஞ் ஞான்றுந், தீதுறமுத் தடையகன்றிங் குபநிடதத் தெள்ள முதைத் தேட மன்பர், பாதகபே ரிருளகல வாதவன்போ லெழுந்த தெனும் பண்ப மைந்த, போதவிளக் கம்புனைந்தான் புகழ்குப்பு சாமியெனும் புனிதன் மாதோ.

பிரஹ்மஸ்ரீ. சிவானந்தசாகர யோகீசுவரராவர்கள்
மாணுக்கர்

ஸ்ரீமத். மா. நமசிவாயம் பிள்ளையவர்களியற்றிய

அறுசீர்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

சீதவளச் சலசமல ருறைமாத ரிருவாருள் செறிந்து நீங்கா, நீதவளம் பெருகிடுமிந் நாட்டினிற்பல் லோருவப்ப நிலையுற் றோங் கும், போதவிளக் கம்மெனுமோர் நூலியற்றி வழங்கினனற் புகழ் மிக் கோங்குங், கோதகல்குப் புச்சாமி யபிதானங் கொண்டுதிகழ் குணமிக் கோனே.

தமிழ்ப்பண்டிதர்

ஸ்ரீமத். வில்லி. ப. தெய்வநாயகமுதலியாரவர்கள்

இயற்றிய

நேரிசை வெண்பா.

போத விளக்கம் புகன்றகுப்புச் சாமியவன்
போத விளக்கிப் புரிந்ததனுன்-மாதவரும்
விண்ணவரும் யோகிகளும் வித்தகரு மற்றுமுள
மண்ணவருங் கொள்வார் மதித்து.

சித்தாந்த சரபம், அஷ்டாவதானம், பூவை
ஸ்ரீமத், கலியாணசுந்தரமுதலியாரவர்கள் மாணாக்கர்
செந்தமிழ் ரத்திஞகரம்.

ஸ்ரீமத். வல்லை. சண்முகசுந்தர முதலியாரவர்கள்
இயற்றிய
நேரிசை வெண்பா.

எதமக லிவ்வுலகோ ரெப்பொருளுங் கண்டறியப்
போதவிளக் கம்புகன்ற புண்ணியத்தாற்-றேதகமா
யிப்புவியி லாரை யிணையாகச் செப்பலாங்
குப்புசாமி யிப்பெரியற் கு.

ஷை கலியாணசுந்தரமுதலியாரவர்கள் மாணாக்கர்
பிரசங்காமிருதம்

ஸ்ரீமத். பாலூர். வேலுதேசிகரவர்களியற்றிய
நேரிசை வெண்பா.

சின்மயமாஞ் சாந்தநிலை சேர்குப்பு சாமியவன்
பன்னினன் போதவிளக் கப்பனுவன்-மன்னியசீர்
வேதாந்த வீட்டினையே வெஃகும் பெரியோர்கட்
காதார மெந்நாளு மாம்.

சென்னை. வேப்பேரி லண்டன் பெண்பாடசாலைத்
தமிழ்ப்பண்டிதர்

ஸ்ரீமத். கொ. இராமலிங்கத் தம்பிரானவர்களியற்றிய
நேரிசை வெண்பா.

வேதப் பொருளென்றே மேதினியோர் தாங்கணிக்கப்
போத விளக்கம் புகன்றனனற்-கோதில்
குணக்குப்புச் சாமி குறித்தமொழி சொன்னன்
மணமிக்க தாய்மணக்கும் வாய்.

சென்னை, பச்சையப்பன் காலேஜ் தமிழ்ப்பண்டிதர்

ஸ்ரீமத். கா. ர. கோவிந்தராஜ முதலியார்
இயற்றிய
நேரிசை வெண்பா.

போத விளக்கமெனும் பொற்புறுநூ லொன்றினைநற்
சீதத் தமிழ்மொழியாற் செப்பினன் - கோதிலா
வப்புசார் செஞ்சடையா ரன்பமரு நற்புலத்துக்
குப்புசா மிக்கோன் குறித்து.

தமிழ்ப் புலவர், நெல்லி

ஸ்ரீமத். அப்பாசாமி உடையாரவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

மாதமர்தே னும்பேட்டை வாழ்வோன்சான் றோர்புகழ்ந்தே
யோதுமங் கப்ப னுதவுஞ்சேய் - போத
விளக்கமெனு மோர்நூல் விளம்புகுப்பு சாமி
விளக்கமே யப்புவியின் மேல்.

ஷை உடையாரவர்கள் மாணுக்கர்

திருமயிலை. ஸ்ரீமத். கி. இராஜுகிராமணியாரவர்கள்

இயற்றிய

நேரிசை வெண்பா.

எங்கும் புகழ்தேனும் பேட்டை யினிதமர்ந்த
வங்கப்ப னீன்ற வரும்புதல்வன் - றுங்கமுள
போத விள்க்கம் புகல்குப்புச் சாமிக்கொப்
பேது கிளக்க வினிது.

சென்னை, கோமளேசுவரன்பேட்டை

ஆசிரியர், ஸ்ரீமத். கோ, வடிவேலு செட்டியாரவர்கள்

மாணுக்கர்களுளொருவராகிய

ஸ்ரீமத். தே. கிருஷ்ணசாமி பாவலரவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

நாட்டுந் திருசியமு நற்றிருக்கு மற்றவிட
மூட்டிக் கருவகற்று முண்ணமுதைக் - காட்டுமோ
ரய்யாக்கண் ணுக்குரவ ணர்ந்த விணையடிக்குப்
பொய்யாது வைத்தானன் பு. (க)

சென்ற கருதாது சேர்வ தினையாம
லென்று நிலைபொருளை யின்னகத்திங் - கொன்றுவா
னெட்டாசை நீக்கு மெழில்குப்புச் சாமிவே
ளெட்டாசை போற்றவே யின்று. (உ)

அன்பினுற் றுனடைந்த வாரணத்தி னுட்பொருளை
மன்பதைக டாமுணர்ந்து மாண்புபெறக் - கன்மமலக்
கட்டறுக்கும் போதவிளக் கம்புகன்றுன் மெய்ஞ்ஞான
விட்டருக் கிட்டனவ னீண்டு. (ங)

புரசை. அஷ்டாவதானம். ஸ்ரீமத். சபாபதிமுதலியாரவர்கள் மாணுக்கர்

ஸ்ரீமத். விசுவநாதம் பிள்ளையவர்களியற்றிய

நிலைமண்டலவாசிரியப்பா.

மன்னர்கண் மாபெலா மகிழ்ந்திட வந்தோன்
இந்நிலத் தெங்கணு மிலங்கிடுங் கீர்த்திமான்
துன்னிய சோழன் சுகமாங் குலத்தோன்
நன்னகர் தேனு நாடுறை மன்னன்
பொன்னங் கப்பன் புண்ணிய வம்மணி
எண்ணிலாப் பேற்றை யெடுத்திட மகவாய்த்
தோற்றிய குப்புச் சாமியாம் பூபன்
போதந் தனையடை புண்ணியர் தமக்குப்
புனித வறிவாம் போத விளக்கம்
இனிதா யளித்தா னெண்ணருங் குணத்தோன்
இஃதுணர்ந் தோரெலா மிவ்வுல காசைப்
போதை நீங்கிப் புனிதச் சிவமாய்
நீதமா வாழ்குவர் நிச்சய மிதுவே.

சைதாபுரி. ஸ்ரீமத். முனிசாமிமுதலியாரவர்கள் மாணுக்கர்

ஸ்ரீமத். பெ. முத்துசாமி உபாத்தியாயரவர்களியற்றிய

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

மணமல ருகுக்கும் பூம்பொழி லடர்ந்து மன்னுறு தேவனும் பேட்டைக், குணமுறு மங்கப் பன்றவத் துதித்துக் கூறுத னன்னிலை தேர்ந்த, தணவிலை யாக்க ணரிய னறைந்த தன்னிக ரில்லதோர் மொழியா, லுணர்ந்ததைப் போத விளக்கமா வுரைத்தா னுத்தமக் குப்புசா மிக்கோன்.

வித்துவான். ஸ்ரீமத். சு. அப்பன்செட்டியாரவர்கள் மாணுக்கர்

பிர்ம்மஸ்ரீ. உ. பரசுராம ஆசாரியாரவர்களியற்றிய

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

உலகுவப்பற் றொருபிரம ஞானந் தோன்று
முத்தமவே தாந்தநூ லுரைக்கும் வண்ண
மிலகுமந்நூற் பொருள்களுணர்ந் தெவருந் தேர்வா
னியற்போத விளக்கமென வியற்றி னானல்

பலகலைக ளோர்ந்துணரும் பான்மை யோனற்
பாவலர்கண் மதித்திடுநா வலனு மிக்க
குலவுபுக ழொடுபொறையு மருவி வாழுங்
குப்புசா மிப்பெயர்கொள் கோமான் மாதோ.

ஸ்ரீ. ஈசூர். சச்சிதாநந்த சுவாமிகள் மாணாக்கர்

ஸ்ரீமத். வித்துவான். சே. சேணியப்ப நாயகரவர்கள்

இயற்றிய

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

மும்மலமா மிருளிரிய மூடமனப் பெருவளியு முருங்கிச் சோரச். செம்மல்சிதா காசமெனத் திகழ்வீட்டி லெஞ்ஞான்றுஞ் சிறப்பி னோங்கக், கொம்மையுறு வேதாந்த வட்டகையிற் குறிவற்றி பொருணெய் மல்கி, யம்மகுப்பு சாமியணல் போதவிளக் கம்மாட்டி யளித்திட் டானல்.

திருத்துருத்தி. இந்திரபீடம்-ஸ்ரீ. கரபாத்திர சுவாமிகளாதீனத்தன்பர்

ஸ்ரீமத். திரு. வே. நடேசநாயகரவர்களியற்றிய

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

அருந்தவத்தோ ராய்ந்தபர மொன்றேநித் தியமதுபே யல்லவெல்லாம், புரிந்தவத்தோர் கொளுநெறியஃ தொருவுகெனப் புகன்றவனு மிந்த்ர பீடத், திருந்தவத்தோ னையாக்கண் ணீசனரு ளிலக்கணமே யீண்டு ரைத்தான், பெருந்தவத்தோ னுங்குப்பு சாமிப்பே ரோன்போத விளக்க நன்றே.

சென்னை. இராயபுரத்தைச்சார்ந்த சிவஞானபுரம்.

ஸ்ரீமத். காளத்தி. இ. சிதம்பரசாமி புராணிகர்

இயற்றிய

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

நன்மார்க்க நவில்வேத முறைப்படியத் வைதநெறி நாடிச் சென்று, துன்மார்க்கப் புலன்களைந்த வையாக்க ஞரியனற் சொரூப மோர்ந்து, புன்மார்க்க வழியகற்றும் போதவிளக் கப்புகழ்நூல் புவியி லுள்ள, பன்மார்க்க ருயுமாறு குப்புசா மிப்புலவன் பகர்ந்திட் டானல்.

பிரசங்கபூஷணம், வித்துவான், ஸ்ரீமத், ஆ. மே. சென்னகேசவலு நாயுடவர்கள் மாணாக்கர்

பிர்மஸ்ரீ. சுந்தராசாரியாரவர்களியற்றிய

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

ஆதவன்போ லொளிரறிவாம் பூரணசச் சிதானந்தத்தை யடையச் செய்யாப், பாதகமா மஞ்ஞானப் பாம்பதனைப் பரிகரித்துப் பார்க்கும் வண்ணம், போதவிளக் கம்மெனுநூல் குப்புசா மிப்புலவன் புகழ்ந்து சொற்றான், வேதவாக் கியமிதுவாம் படித்தாலுங் கேட்டாலும் வினையின் றாமே.

ஸ்ரீமத், மோசூர், முனிசாமி முதலியாரவர்கள் மாணாக்கர் மதராஸ் ஸீகஸ்ட்டம் ஆபீஸ் டிரலிகிளர்க்காயிருந்த

ஸ்ரீமத். போ. சுப்பராவ் அவர்களியற்றிய

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

பார்சான்ற வாழ்வனைத்தும் பாழாகிப் போமென்றே பண்பி னோதுஞ், சீர்சான்ற வையாக்க ணோனுங்குருவி னடிமலரைச் சிந்தித் துய்வோன், கார்சான்ற வினைதபுக்கப் போதவிளக் கம்மெனுநூல் கழறி னானல், நார்சான்ற வுளத்தினனுங் குப்புசா மிப்பெயர்கொ ளுவலோனே.

வித்துவான், கன்னிபுத்தூர், வேலாயுத முதலியாரவர்கள் குமாரரும்

ஸ்ரீமத்-சிவா - கோபிநாத முதலியாரவர்கள் மாணாக்கருமாகிய

ஸ்ரீமத். க. வேதாசல முதலியாரவர்களியற்றிய

எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

மாசுறு மறத்தி னவாவினு வீட்டு மயங்கிரு வினைகளுக் கேற்பப், பேசுறு பிறவிப் புணரிநீந் திடவோர் போறி வுக்கல னெனவே, தேசுறு போத விளக்கமென் றின்னூற் றெரித்தனன் கல்விதேர் மாண்போன், வீசுறு புகழ்சேர் குப்புசா மிப்பேர் விளங்கெழிற் றவத்தினன் மாதோ.

புரசை. ஸ்ரீமத். கு. பொன்னம்பல முதலியாரவர்கள்

இயற்றிய

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

சாதனசாத் தியங்கடந்த சச்சிதா னந்தசிவந் தன்னை யோர்வோர்க், காதரவா யுலகுவப்ப வோர்போத விளக்கமென வாற்றினுல், போதநலோர் பாலன்பு புரிகுணத்தோன் வாய்மையொடு பொறையான் மிக்கோன், நீதகலக் கற்றுணருங் குப்புசா மிப் பெயராற் றிகழ்வ லோனே,

---

இந்நூலாசிரியரி ஞசிரியர்பா லநுக்கிரகமடைந்த

ஸ்ரீமத். செஞ்சி. இரத்தினவேலப்பா அவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

ஐங்கடிகைப் போதிலென தையந்த விர்த்தாண்ட
துங்கவையாக் கண்குருவின் றாய்மொழியால்-சங்கையிலாத்
தன்னுருவைக் கண்ட தகுகுப்பு சாமிசொனுன்
கன்னனிகர் போதவிளக் கம்.

இந்நூலாசிரியரின் மாணுக்கர்களி லொருவராகிய

ஸ்ரீமத். கேசவலுநாயுடு அவர்களியற்றிய

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

உலகமெலா முய்ந்திடற்கா வுள்ளபடி தான்கண்ட வுண்மை தன்னைப், பலகலைவல் லோர்களுங்கண் டுளமகிழத் திகழ்தேனும் பதியில் வந்தென், குலவிளக்கா யுடற்பொருளா விகளையேற் றெனையாண்ட குப்பு சாமித், தலையாய நற்குரவன் போதவிளக் கப்பெருநூல் தந்திட் டானல்.

இந்நூலாசிரியரின் மாணுக்கர்களி லொருவராகிய

ஸ்ரீமத். ம. தொப்பா. அரங்கசாமி முதலியாரவர்கள்

இயற்றிய

நேரிசை வெண்பா.

போத விளக்கமெனும் பொற்புறுநூல் யான்செய்த
மாதவமே செய்யதிரு வாய்மலர்ந்த - வேதமிலா
திப்புவியி லென்னை யினிதாவந் தாட்கொண்ட
குப்புசா மிக்குருவாங் கோன்.

திருநெல்வேலி - பேட்டை

ஸ்ரீமத். உ. சி. ப. சுல்த்தான் செய்யது அகமது

இராவுத்தரவர்களியற்றிய

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

அகத்திருளா மஞ்ஞான மதையொழித்தே யறிவுநிலை யாருங் காண, மகத்துவஞ்சேர்ந் துளபோத விளக்கமெனும் விளக்கதனை மகிழ்ந்த ளித்தான், சகத்துருவந் தனக்கயலாச் சாற்றிடுதற் கேது விலாத் தகைமை தன்னை, மிகத்தெளிந்த வறிவுருவன் சாமிகுப்பு சாமியெனும் விமலன் மாதோ.

சென்னை - புரசைவாக்கம்

லுத்தரன் மிஷன் பெப்ரீஷியஸ் உயர் கலாசாலைத்

தலைமைத் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமத். மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை

யவர்களின் மாணவரும் ஷை கலாசாலை யுதவித் தமிழ்ப் பண்டிதருமாகிய

ஸ்ரீமத். பா. து. கண்ணப்பராலியற்றப்பட்டது

கட்டளைக் கலித்துறை.

இல்லற ஞானியே யென்ன விலங்கிடுங் கொள்கையுடன்
சொல்லறஞ் சூழநற் சாமிகுப் புச்சாமி சோதிபெற
நல்லறம் யாவுமிந் நன்னகர் நாடத்தன் னற்குணத்தாற்
பல்லறம் போதிக்கும் போத விளக்கம் பகர்ந்தனரே.

இந்நூலாசிரியரின் பாதசேகரர். திருவான்மியூர். பிரசங்க சிந்தாமணி

ஸ்ரீமத். த. கோவிந்தசாமிப் பிள்ளையவர்களியற்றிய

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

பொன்னிவாழ் நற்புரசை பூநகர்வந் தேழைகட்குப் பொம்ம லூட்டி, மன்னிவா ழெங்குருவாஞ் சாமிகுப்பு சாமிவாய் மலர்ந்த சொற்கள், துன்னிவாழ் போதவிளக் கம்மெனுமோர் சுவாநுபவந் துலங்கிந் நூலை, யுன்னிவாழ் வாரெவரோ வவர்பரம ஞானியரா யுறைவர் மாதோ.

சிறப்புப் பாயிரம்.

உபாத்தியாயர்

சைதாபுரி. ஸ்ரீமத். முனிசாமி முதலியா ரவர்கள் மாணவர்

வித்தியாவதானம்

ஸ்ரீமத். பிரம்பை. பொன் னுவேற்பிள்ளை யவர்க

ளியற்றிய

நிலமண்டல வாசிரியப்பா.

பொன்னவிர் மலரிற் பொதும்பர்சின் றிறைஞ்சு
மின்னவிர் சோலை மிளிரக்கற் பகமென
வட்டலட் சுமிகளு மமர்ந்திருந் தென்றுந்
தட்டிலாத் தருமந் தான்வளர்ந் திடலாற்
கற்றோர் போற்றுங் கல்விக் களஞ்சிய
முற்றோ ரவையி லொளிர்ந்திடு மாண்மைப்
புலவோர் பலரும் பொருந்துவ தாலு
மலர்மணக் கோதையர் மகிழ்நருக் கடங்கிக்
குறிப்பறிந் தொழுகுங் கொள்கையே மேற்கொடு
நெறிப்படி யொழுகு நேர்மைய தாலுஞ்
செங்கோற் சுடருஞ் சிறந்தசிற் சுடர்களு
மங்கா மதியையு மன்னுடுக் களையு
மொப்பா விளங்கி யொன்றுங் குறைவிலாச்
செப்புதற் கரியபல் சேண்புகழ் தாங்கி
வானும் பதியென வயங்கிடுஞ் சென்னைத்
தேனும் பதியைத் திகழ்தன் பதியதாப்
பெற்றவன் பாற்கர குலத்துப் பிறந்தவ
னற்றவக் காசிபக் கோத்திர நாயகன்
வண்புகழ்ச் சோழ வம்மிசத் துதித்தோ
னெண்ணரும் வேதமா லிலங்கயன் முதலோர்
தேடியுங் காணாத் திகம்பரச் செல்வ
னாடுமா தவர்க்கு நலந்தரும் விடையவன்
பூதியே பொருளெனப் போந்தவே னாதி
நாதர் பரம்பரை நன்குவந் துதித்த
துங்கநற் குணங்க டோன்றிட வாழ்ந்த
அங்கப் பன்னவ னணிமனை யம்மணி
யம்மா ளிவர்தவ மானவெ லாந்திரண்
டிம்மா நிலத்தி லிசைபெறு நாயனா
ரறை "பெறு மவற்றுள் யாமறிவ தில்லை
யறிவறிந்த மக்கட் பேறல பிற" வெனும்
பெருமொழிக் கிலக்காப் பேசிடு மறிவே
யுருவுகொண் டாலென வுதித்திங் குறுபவ
னடுநிலை திறம்பா நாத்துலை யுடையோன்
கடுஞ்சினங் கடிந்த கனிமனத் தண்ணல்
பொறுமைநற் குணங்கள் பொருந்திட மாகியுஞ்

சிறந்திடு மன்பு செறிவிட மாகியு
நெஞ்சை யொளித்தொரு வஞ்சகம் புகலா
வின்சொலு மீகையு மேய்ந்திடு நல்லான்
பல்வழி யலைந்தும் பயனுறாச் சிறார்க்கு
நல்வழி காட்டு நற்பிதா வாகியுஞ்
சுசாதிய மென்று சூழ்ந்து கோடலும்
விசாதிய ரென்று வெறுத்து நீக்கலு
மில்லா தியாவரு மினத்தவ ரெனவே
யெல்லா நாளு மியைந்துற வியைவோன்
வருவிருந் தினரை மலர்முகங் காட்டிப்
பரிந்தமு தூட்டலிற் பயந்ததா யொப்பான்
சந்தத நட்புறாஉந் தக்கோர் சத்துவ
புந்திக் கிசைந்த மந்திரி யாவான்
சைவம் வயிணவஞ் சமண மாத்துவங்
கௌமா ரஞ்சாத் தேயமாத் மீக
மருகம் புத்தம் பட்டாச் சாரியங்
கிரிடாப் பிரம வாதமும் லீலாப்
பிரம வாதமும் பிறவுள சமயமுந்
திரமில வெனத்தஞ் சிந்தைக் கெட்டவும்
போதா நந்தமே பொருளெனக் காட்டும்
வேதாந் தமதே விரிந்து விளங்குறாஉஞ்
சமயமே யுண்மையைச் சார்ந்திடற் குறும்பல
மமைந்ததா மெனத்தேர்ந் ததன்றலை யுண்மை
நிலையினைக் கண்டு நிலைத்தநன் மேலோர்க்
குலைவறு பணிசெய் யுத்தமத் தொண்ட
னவர்களிந் தேவு மரும்பணி செயற்குத்
தவறிலா மதிச்சற் புத்திர னாவோன்
பூதலப் பொருள்கள் பொதுமையென் றறிந்த
மூதறி வாள னாதலின் பசித்தே
யில்லையென் பார்க்கெலா மில்லையென் னாமை
னல்லுரை யின்முக நாட்டியே யன்ன
தானமே சிறப்புடைத் தாமென் றிடைவிடா
வானபே ரறிஞர்கள் வாழ்த்திடச் செய்துநி
தானமா யெவற்றையுந் தான்கண் டுணர்ந்திட்
டனம தொரீஇ யேற்பன தழீஇ
விசேடநல் லறிவு விளங்கிடுஞ் சீலக்
குசேலனுக் கொத்த கூறுமில் லறத்தோன்
விடநிறை பாலென வேடங் கொண்டநன்
னடையிலார் தமையெலா நாடியா ரியமென
வருந்திநீர் வேட்கையான் மாமலர்த் தடத்தைப்
பரிந்துநே டுவான்போற் பாமர சிரியனெற்
கெங்குளா னெங்குளா னென்னவா ராயுந்

திங்களாட் கொண்ட தேசிகற் செப்பிடி
னெதிரிலாச் சைவ சமயமீ டேற்றித்
துதிபெறு மழியாத் தொன்னிலை சார்ந்த
நால்வருட் சுந்தரர் நல்லுருப் பிணியை
மேல்வரா வகையா விளங்கருட் செய்து
நாடெலா மேத்து நர்யனு ரையடி
காடவர் கோன்வெண் பாக்கனிந் தளித்தது
மன்னிய சோழ வளநா டதனிற்
பன்னருஞ் சிவத்தலப் பகுதியி னென்று
மமிர்த முகிளாம் பிகையமை யுடனே
யமர்ந்திடு முத்தா வதேச்சுரர் நாளுந்
திருத்துருத் தித்தலந் திகழ்க்கீட் டிசையி
லருத்தியா லான்றோ ரமைக்கப் பெற்றுள
தந்துவின் முடிபறி தக்கோர் புகழு
மிந்திர பீடத் திருந்தநன் மேலோன்
பரபாத் திரங்கள் பாழ்படு மெனவே
கரபாத் திரமே கருதியெக் காலமுந்
திரமெனக் கொண்ட சீர்தரு ஞானி
கரபாத் திரனவன் கண்ணியத் திருவடி
யெத்தரு ணத்து மிருமுடி யாக்கொ
டத்தாத் திரயன் றண்பதாம் புயமே
தங்கக முடையான் சாற்றரும் புகழ்சேர்
சேங்கம லப்பெயர் சிறந்திட வாய்ந்தோ
னுமத்தம னவனடி யுளக்குளத் தமர்த்து
முத்தைய சுவாமியா மூதறி வாளன்
றப்பிலா விவன்றன் றகுமா ணவனுஞ்
சுப்பிர மணியச் சுகுணனு மிவன்பின்
பெருநா வலர்களும் பேசிடு நாகை
யருணா சலப்பெய ரடைந்தவன் பின்புநீர்த்
துறைதொறு முத்தந் தூவிடு வளங்கொள்
பிறைசை யருணா சலப்பதி யிவற்கிங்
குலகெலாம் புகழு முண்மையா நிலைசே
ரலகிலா வருள்பெறு மறுபான் மும்மைத்
தொண்டரு ளாதியாச் சொற்றிரு நீல
கண்டரின் குலத்துக் கண்மணி யாவான்
றன்னிலக் கணத்தைத் தாவற வுணர்ந்து
தன்னிக ரில்லாச் சமர்த்தனென் றெவருஞ்
சொற்றிடப் பிரபல சுருதிகா ணுதார்
பற்பல வினுக்களுக் குறுவிடை பகர்ந்து
கற்றலைப் படுவிளங் கனியெனச் செய்தும்
விற்பனர் புகழ வேண்டுநா லருளி
யுச்சிதப் பேறோ டுலவிய வீரூர்ச்

சச்சிதா நந்தன் றருமா ணவனுங்
களங்கமின் மனத்தோன் கருணையா முருவோன்
விளம்பிடு மிவற்கு விருப்பார் தொண்ட
னுடல்பொரு ளாவி யொருங்கினி தளித்து
விடற்கரும் பொருண்மொழி விருப்புட னேற்றிட்
டத்வை திகளென வான்றதொன் னூல்களிற்
சித்தித் தவற்றிற் சிற்சில வாய்ந்து
தற்புகழ் டம்பந் தற்பெரு மைகளி
லற்பமும் விடாம லரைப்படிப் பளவாய்ச்
சொற்பதர் புடைத்துத் துவண்டு வாடிடு
மற்பர்போ லாதெலா மநுபவத் தாய்ந்து
மூன்றோ டிரண்டாய் மூண்டிடு பிராந்தியை
யான்றதன் னறிவா லவமெனக் கழித்துச்சீ
வாத்துமா வந்த ராத்துமா வும்பா
மாத்துமா வொடுஞா னாத்து மாத்துரீ
யாத்துமா முதலா வறையுமத் வைதமாஞ்
சாத்துசு வப்பகா சத்தன் மயனாய்
நையாப் பலன்பெறு நாயக னாகு
மையாக் கண்ணெனு மருந்தவ வாரிய
னலிவறா முடையார் நாடிய யாவும்
வலிதிற் கிடைக்கு மாறெனக் கிட்ட
நற்றவ னன்பா னன்மொழி யொன்றை
யுற்றங் குதவலு முடல்பொரு ளாவி
யுள்ளமார் காம வெகுளி மயக்கறக்
கொள்ளையாக் கொடுத்தன் னவனடி முடியாக்
கொண்டதே யன்றிக் கோதறு மனத்திற்
கண்டிராப் பகலெனக் கருதிடா துள்ளம்
வருந்தினுங் களிக்கினும் வாய்ந்ததைச் செயினு
மிருக்கினு நிற்கினு மியாருடன் பேசினு
நடக்கினு மோடினு நல்லுணத் துய்க்கினும்
படுக்கினும் பாவையர் பக்கமே விடினுஞ்
சிந்தையை யவன்பாற் செலுத்தவா நந்தம்
வந்துவந் தடுக்க வளர்பிறை போன்று
சுகநிலை வளரச் சுகவுரு வாகிச்
சகநிலை மறந்து தன்னைத் தெரிந்து
கருக்குழி வாராக் கடைநிலை கண்டே
யுருக்கமா மெய்ம்மை யோர்ந்திட வுண்மைக்
குழுவிய கருத்தெலாங் கொண்டு விளங்கிட
வழுவிலாத் தேன்பழ வருக்கமீந் தாலென
வவத்தலுங் காய்தலு முதறியே பார்க்குந்
தவத்தினர் ஞானத் தனிப்பய னுறவே
கண்டிகை நீற்றொடு காவியார் மேனியைக்

கண்டிடிற் பானைக் கண்டவா றவரைச்
சுவாமிகா ளெனப்பணி சுபாவத் தாற்றனைச்
சுவாமியென் றெவருஞ் சொற்றிடப் பெற்ற
குப்பு சாமிக் கூரறி வாளன்
தப்பிலாப் போத விளக்கநூல் தந்தான்
அடக்கமாம் பீடத் தமர்ந்துயார் யார்க்கும்
விடற்கரு முண்மையார் வித்யா வதானியன்
பாரவுநன் மறையா கமமிதி காசம்
புராணமோ டிலக்கிய விலக்கணந் தருக்கஞ்
சத்தினைக் கண்ட சதுரன்வே தாந்த
வித்வத் சிரோமணி வடிவேற் பெருந்தகை
தக்கவிந் நூல்பிழை தபுத்துக் கொடுத்திடப்
பக்குவ நிட்டையிற் படிந்துளா னநுபவா
நந்தனு மிந்நூ னவின்றவற் குகந்த
நந்தலி னண்பனு நாந்தொழும் வடிவுடை
யம்மையை யிடப்பா லமர்த்திடு மூர்த்தியா
நம்மையா ளுடைய நற்றியா கேச
னமர்திரு வொற்றி யாந்தலத் துதித்தோன்
குமரன்சம் பந்தனெம் பெருமான் கூறும்
"மண்ணினிற் பிறந்தார் பெரும்பயன் மதிசூ
டண்ணலா ரடியாரை யமுதுசெய் வித்த"
லெனுமுரைப் பயனை யிட்டிடக் கொள்ளையாய்
மனுமிந் நூலையச் சியற்றி வரும்பொரு
ளீஞர்ச் சச்சிதா நந்தனின் வருடப்
பூசையி லடியார் போசனத் திற்கா
வைத்தன னவன்பெயர் வழுத்துவர் யாரும்
மித்திர வேங்கட ராயனு மென்னே.



செய்யுள் எண்.	வரி எண்.	
		பாயிரம்.
உ	ந	வருக்கத்தவர்=இனத்தவர்.
சு	ச	வேட்டு=விரும்பி.
கந	உ	துரிசு=குற்றம்.
கரு	ந	நிறைகண்=பூரண அறிவு
		நூல்.
உ	ச	அருள்=பிரம்மாகார விருத்தி.
ச	ந	நிரதிசயம்=வேதாகித நிலை.
சு	ந	ஐங்கோசம்=பஞ்சகோசம்.
உ0	உ	அறப்புதுமை=பெருவியப்பு.
உஅ	உ	ஊகம்=யுக்தி.
உகூ	உ	சம்மாக்கும்=பிறப்பை யுண்டாக்கும்.
நக	உ	ககனம்=ஆகாசம்.
நந	க	வாலறிவு=தத்துவஞானம்.
சஎ	க	கட்டம்=சம்சார துன்பம்.
,,	ச	கண்டகர்=முள்போன்றவர். (துஷ்டர்)
சஅ	க	சழக்கர்=வீணர்.
ரு0	உ	விழைச்சு=விருப்பம்.
ருக	ச	ஓவுநிலை=மனமிறந்தநிலை.
ருந	உ	வறப்பில்=கெடுதலற்ற.
ருஅ	ந	வாங்காது=ஒழியாது.
சு0	க	பாகண்டர்=இடம்பர்.
,,	உ	மாகண்டம்=பேராபத்து.
,,	உ	ஆகண்டத்தார்=நன்மையமைந்த தேவர்கள்.
சுக	உ	பொள்ளறிவு=திரிபுணர்ச்சி.
சுஉ	ச	தத்துமனத்தார்க்கு=பலதலைப்பட்டோடும் மனமுடையவர்க்கு.
சுரு	உ	பூமா=சிவம்,
சுசு	உ	சோகாப்பர்=துன்புறுவர்.
எ0	உ	உயர்புவி=ஞானபூமி.
,,	ந	அலமலம்=சுழலச் செய்யும் பாபம்.
,,	ந	விட்சேபம்=மனமொருமுகப்படாமை.
எந	க	போதரும்=கெடும்.
அ0	ந	வேதகம்=ஞானம்.
அக	உ	ஒள்ளறிவு=விசாரஞானம்.

௮௫	௩	சமாதி=நிஷ்டை.
௮௬	௩	நாற்சாதனம்=சாதன சதுஷ்டயம்.
௯௧	௩	அன்பர்=தாயுமான சுவாமிகள்.
௯௫	௩	ஏமாப்பு=கர்வம்.
௯௬	௪	பட்டிடும்=கெடும்.
௯௭	௧	கண்ணறியா=அறிவை யறியாது.
,,	,,	செம்மாப்பர்=கர்விப்பர்.
௧௦௭	௩	தண்டிக்குச்சு=தாழ்வாரந் தாங்குந் தூண்.
௧௦௮	௨	பாறும்=கெடும்.
,,	,,	வகிர்தல்=பின்னமாதல்.
௧௧௦	௨	வதமாம்=கேடுறும்.
௧௨௧	௧	சாந்தி=துரியம்,
௧௨௯	௨	மூலதனு=காரணசரீரம்.
,,	௪	மோதம்=பரமாநந்தம்.
௧௩௭	௨	ஓர்ப்பு=அறிதற்கு அரிய.
௧௪௧	௨	தேடி=தேடி.
௧௪௩	௩	உத்தேசமாதி=உத்தேசமுதலியன (வேதாந்த சூடாமணி).
௧௪௫	௩	அடிமயக்கம்=மூல அஞ்ஞானம்.
௧௪௯	௪	வேசற்று=சோர்வற்று.
௧௫௨	௩	பனவுதற்கு=வினவுதற்கு.
,,	,,	படிவம்=வடிவம்.
௧௫௫	௧	தாசோகம்=அடிமை நான்.
௧௫௮	௪	பங்கினிலே=பூரணநிலே. பங்கு-இல்-நிலே.
௧௭௮	௪	கேவலம்=தன்னந்தனித்த நிலே,
௨௦௯	௨	மை=விபரீதம்.
௨௨௪	௪	பாவியநோக்கார்க்கு=பராமுகப்பட்டவர்க்கு.
௨௩௨	௪	மூவா=மூத்துக்கெடாத.
௨௩௯	௨	தத்துவம்=உயிரில் பொருள்.
௨௪௩	௧	ஏதுடல்=காரணசரீரம்.
௨௪௮	௨	வணமார்=அழகமைந்த.
௨௪௯	௨	கொன்னுய்=அச்சங்கொண்ட நாய்.
௨௪௯	௨	வினைமுடிச்சு=கர்மக்கிராந்தி.
௨௫௦	௨	தானெழிந்து=ஜீவபோதங்கெட்டு.
௨௫௨	௨	இறப்ப=மிகுதியாக.
௨௫௫	௨	தேக்குநிலே=பூரணநிலே.

ஓம்

பரப்ரஹ்மணே நம:.

போத விளக்கம்.

பாயிரம்.

விநாயகக்கடவுள் வணக்கம்.

நேரிசை வெண்பா.

ஆனைமுக னறுமுக னனகுரு வாய்வந்து
ஞானநிலை காட்டி நவைநீக்கி—மானமுட
னெல்லாநீ யென்றே யினிமையாப் போதித்த
நல்லானை நெஞ்சே நவில். (க)

ஞானவணக்கம்.

சத்தியமா யெங்குந் தனிநிலையா யெவ்விடத்து
நித்தியமாய் நின்று நிறைபொருளைச்—சுத்த
வருக்கத் தவர்க்கமுதாய் மன்னு மறிவை
யுருக்கமுட னெஞ்சேநீ யோர். (உ)

சொரூபவணக்கம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

விண்ணுல காதி யாகி விளங்கியுந் தந்தை தாயா
யெண்ணிய பொருளை யெல்லா மீந்துமே யின்ப மாகிக்
கண்ணிமைப் போல வென்னைக் காத்துமே யறிவா னந்தத்
தண்பொரு டானுத் தந்த தற்பரன் றாளைச் சேர்வாம். (ங)

உன்னுறு மனத்தி னாலே யுலகமா யிந்த்ர சால
மன்னியே யநேக நாளா மயங்கிய நாயி னேற்குத்
துன்னிருள் போக்கி யாண்டு சுத்தர்கண் முன்னே யென்னை
யன்னிய மாக்கா வாறிங் காண்டரு ளடிகள் போற்றி. (ச)

மஹான்கள் வணக்கம்.

நேரிசை வெண்பா.

சாற்று சுகன்சனகன் சாந்த சிகித்துவசன்
போற்றுமிவ ராதியர்தாள் போற்றியே—நாற்றிசையும்
போத விளக்கநூல் பொன்று துறமகிழ்ந்திங்
கோதினே னுண்மை யுணர்ந்து. (ரு)

சொன்னவிடத் தைக்கண்டு சோதித்துத் தம்முருவிற்
கன்னியமா காதிங் கறிந்துரைப்பி—னன்னவர்தா
மென்னகுல மானு மெந்தைசிவ மென்றவர்தம்
பொன்னடிக்கா ளாவேன் புகழ்ந்து. (சு)

தன்வடிவ மின்னதெனத் தானறியக் கல்லானை
யுன்னி மதியேனு னோர்பொருளாய்ப்—பன்னுமறை
சொற்றபொருள் பார்த்துணர்ந்து சோதிவடி வேயான
நற்றவர்க்கே நானடிமை நன்கு. (எ)

சங்கரபகவத்பாதாசாரியர் வணக்கம்.

வேதாந்த பாடியத்தை வேண்டியருள் சங்கார்தம்
பாதாம்பு யங்கடமைப் பற்றியே—யோதாதேன்
முற்றறிந்தார் முன்னே முடிவா நிலையுணர்ந்தேன்
கற்றறிவ தென்னையினிக் கண்டு. (அ)

சச்சிதாநந்த சுவாமிகள் வணக்கம்.

சச்சிதா நந்தத் தனிப்பரம வாரியனே
கொச்சைமயல் போக்கவந்த கோமானே—மெச்சுபுகழ்
நாட்டீசூர் நின்றெழுந்த நற்சுடரே நின்னடியை
வேட்டுடலின் பற்றறுப்பேன் மேல். (கூ)

தேவிற் சிறந்த திருவொளியை வண்மையுள
பாவிற் சிறந்தபற் பாவோதிப்—பூவின்பா
லுச்சிதமா யாரு முகந்துகொண் டாடுமெங்கள்
சச்சிதா நந்தனையே சார். (கo)

ஐயாக்கண்ணு தேசிக மூர்த்திகள் வணக்கம்.

தானே முழுதுணர்ந்து சங்கையிலா தெக்கலையு
மானே றுகந்த வான்போல—மானிலத்தி
னோரான வாரியனை நின்று பணிவதுவே
சீரான மார்க்கமெனத் தேர். (கக)

தானே முழுநிலையைச் சங்கையிலா தீந்தருள
மானேர் விழியார் மயலொழிக்கா—தானேற்குப்
பங்கயனு மாலும் பகாவரி தானமொழி
பங்கமறச் சொன்னனைப் பற்று. (கஉ)

திரிசிராப் பள்ளிதனிற் றிண்மையுட னெற்காந்
துரிசகல நல்லுருவாய்த் தோன்றிப்—பரிசுடைய
கற்றுவைப் போலக் கனிந்தமன மோடென்னைப்
பெற்றனை நெஞ்சேநீ பேசு. (கங)

உள்ளதுபோற் றேன்றுவதை யுள்ளதல வென்றுதளி
யுள்ளநிலை யீதென் றுணர்த்திநின்ற—கள்ளமிலா
வையாக்கண் ணாரியனை யன்பிலே னுக்கருளைச்
செய்யாவந் தானையே தேர். (கச)

நூற்பெயர்க்குக் காரணமும், நூற்பயனும்.

வேதத்தி னுண்மை விளக்கலா லிந்நூலுன்
போத விளக்கப்பேர் பூண்டதாம்—பேதமுறு
காத றவிர்த்துநிறை கண்ணளித்துப் பூரணமா
யாதனிலை யாக்குமே யாம். (கரு)

அவையடக்கம்.

கலி விருத்தம்.

ஆன முத்தமிழ் வல்ல வறிஞர்முன்
ஞான மில்லே னவில்கலை தன்னையு
மான நன்மொழி வல்லர்முற் றுங்கொள்வ
ரீன மார்க்க ரிகழ்ந்துசொல் வாரரோ. (கசு)

குறைமதி யாயினுங் குவல யத்துளோர்
நிறைபெறு மவ்வொளி நீக்கு கின்றிலர்
மறையுணர் வினரிதை மகிழ்ந்து கொள்ளுவர்
நிறையுணர் வில்லவர் நிந்தை செய்வரால். (கள)

பிரதிஞ்ஞை (தந்துணிபுரைத்தல்).

நேரிசை வெண்பா.

வேதத் துறுபொருளை வித்தகமாய்ப் பத்திபெறச்
சாதகமா யிந்நூலிற் சாற்றினேன்—நீதகல
வுன்னித் தெளிவார்க்கே யுண்மைநிலை யேயளிக்கு
மென்னுசா ஞணை யிது. (கஅ)

பாயிர முற்றிற்று.





நூல்.

(க) உடற்பய னுறுத லுத்தமர்க் கேயெனல்.

நேரிசை வெண்பா.

அண்ட ருணரா வறிவுருவா நின்றதுவே
யெண்டிக்குந் தானு யிலங்குவதாம்—விண்டதனைக்
கண்டுணர்ந்து நின்றாரே காயப் பயன்கொண்டார்
பண்டறிவா னந்தத்தின் பாங்கு. (க)

(உ) பேத நோக்கம் பெயரும் வகைசொலல்.

மண்ணே பலவிதமா மாறி யுருப்பட்டுப்
பெண்ணு ணலியாகப் பேர்பெறுமால்—கண்ணுறுங்கால்
விண்ணாட்டத் தோன்ற விளங்குமே தன்னுருவா
யுண்ணாட்டங் கொண்டருளா லுற்று. (உ)

(ங) துய்யர் முதலியோர் தொழினிலை கூறல்.

துய்யரென்பார் தந்நிலையைச் சோதித் துணர்ந்துநிற்பார்
பொய்யரென்பார் தம்முடலைப் பூசிப்பார்—செய்யநிலை
காணுந் தவமில்லார் காணாதே சேவிப்பார்
பூணும் பலபணியைப் பூண்டு. (ங)

(ச) நிஜவடி வடைய நெஞ்சொடு கிளத்தல்.

ஒருபொருளை நீக்க லொருபொருளைப் பற்ற
விருபொருளை நீக்கி யிடையே—சொருபநிலை
நீசற் றசையாது நிற்கி னிரதிசய
மாசற் றடைவாய் மகிழ்ந்து. (ச)

பகையாகும் பற்றினைநீ பங்கமற நீக்க
வகையா வகமுகமா மன்னித்—தொகையா
மிகபாத்தி னேரு மிரும்பிறவி நீக்குஞ்
சுகமுதய மாகத் துணி. (ரு)

காயு மிலையுடனே காற்றருந்தி நின்றாலு
மேயும் பிறப்பறுத்த லேலாது—தூய
ரடிபணிந்தைங் கோச மகற்றுநெறி நின்றான்
மடியுமா யாமயக்கின் மாண்பு. (சு)

உண்மையெது வென்றோரி னுண்மை யறிவுருவே
திண்மை யிதுவாகுஞ் சித்தாந்தம்—கண்மயங்கி
யோடா தகம்புறமு முள்ளவா றுற்றுணரி
னூடா நிலைவாய்க்கு நாடு. (எ)

தன்னிலையை யோராது தான்குருவா மென்றெண்ணி
மன்னியுழல் கின்றாய்நீ மாமனமே—நன்னயமா
முற்றறிந்தார் போற்காட்டி முத்திநிலை கிட்டறியாய்
கற்றிருந்து மென்னபயன் காண். (அ)

பந்தமுத லைங்கோசம் பக்குவமா நீக்கவான்
றந்தமகா வாக்கியத்தைத் தானுன்னிச்—சந்தநிறை
சந்தமறை சொற்றபொருட் டானேதா னேயாக
நந்தலின்றி நெஞ்சேநீ நாடு. (கூ)

எல்லா மிருக்க விலையாக்கு ஞானமது
சொல்லா லுரைக்கத் துணிவுறுமோ—பல்கலையுங்
கற்றா லிதுவருமோ கண்ணான சற்குருவை
யுற்றா லுறுமெனவே யோர். (கo)

ஆசையுடற் றானாக வாட்டிவைக்கு மாணவந்தான்
பாசமழித் தோரைப் பகையாக்கு—மாசகிலாத்
துஞ்சி லிருக்கவொட்டா தொந்தத்தின் பாலாக்கும்
விஞ்சறிவாற் கொல்ல விரை. (கக)

தன்னூர்க் கலகமதைத் தார்வேந்தன் போக்கானே
லென்னவா னம்மன்ன னிவ்வுலகி—னன்னதுபோற்
காமாதி துர்க்குணத்தைக் கண்ணாகி நீக்காற்குச்
சாமாறு மாமாறுந் தான். (கஉ)

வெளியை யளக்கவே மேவுமரக் காலுள்
வெளியிருக்கக் காணின் வெறிபோம்—வெளியுருவைத்
தேடினேன் றானே சிதாகாச மென்றுணர்ந்தா
னூடுவதென் னுண்டா நவில். (கங)

அத்துவித மெய்ப்பொருளை யாலின்கீழ் நால்வருக்குக்
கத்த னுரைத்த கருத்தோர்ந்தான்—மத்தமதி
நில்லா தகலு நிசவடிவ மேதோன்றும்
பொல்லாப் பிறப்பகன்று போம். (௧௪)

அவத்தைமுதற் றேற்றத் தசையா திருப்பின்
பவத்தைக் கெடுத்தல் பலமாந்—தவத்தி
லறிதற் களைந்தருக்க ஞன்றவொளி யாவாய்
பிறிதற் கினியென்ன பேசு. (௧௫)

ஆன்கறக்கு மந்நோ மம்புவிடு மந்நோந்
தான்பொருந்தி நிற்கச் சரிநிலையா—மேன்மேலும்
பேரா யிரங்கற்றுப் பேசினு லென்பயனுந்
தீரா வருமயக்கந் தேர். (௧௬)

பூத வுருவாற் பொருந்துபல தோற்றமெலாஞ்
சாதனத்தின் மித்தையாய்த் தங்கிடுமா—லாதாவாய்க்
காதலுடன் சாதனத்திற் கண்ணுகு மாதவர்க்கிங்
கேதமென்ப தொன்று மிலை. (௧௭)

ஊறி மலந்தளும்பு மொப்பிலா நாரிகளைக்
காறி யுமிழாமற் கண்ணிழந்து—மாறித்
தறித்தவுரு வேறுத் தளருகின்ற பாழ்நெஞ்சே
வெறுத்துநல சாதனத்தை வேண்டு. (௧௮)

மண்ணுருவை யன்றி மனிதர்க் குருக்காணே
மண்ணுருவை மாற்ற வகையறியோந்—திண்ணமதாங்
கோசமெனும் பாழ்ங்களையைக் கொத்திக் களையாமல்
பாசமன மற்றிடுமோ பார். (௧௯)

மறப்புநினைப் பற்று மனுபூர ணத்தி
லறப்புதுமை யாகி யமர்ந்து—சிறப்புற்ற
வாதித்தன் றன்னொளிபோ லண்டமெலா மும்விளங்கிச்
சோதித்து நிற்கத் துணி. (௨௦)

ஜீவன் சிவமென்று தேர்ந்தறியாப் பாவிகடாஞ்
ஜீவனிலை தேர்ந்தாரைத் தீதுரைப்ப—ராவ
லழுந்தாது நிற்பினல் லாநந்த மாவா
யுழுந்துருளு நேரத்து ளோர். (௨௧

மூடைநாற்ற முள்ள முழுமலமாந் தேகந்
திடமான தென்று செருக்கி - நடைகுலுக்கு
மின்னாரி னேசமதை மேன்மேனீ கொள்கின்றா
யென்னபயன் கற்றதனா லிங்கு. (உஉ)

ஆலைக் கரும்பினைப்போ லல்லற் படுவதன்றி
மேலைப் பிறப்பொழிக்க மேவுகிலாய்—சீலமா
யெல்லை கடந்தார்போ லின்பநிலை காணாது
சொல்லிற் சிறந்தாய் துணிந்து. (உங)

தன்னால் விளைவினையைத் தானடைவ தேதிர்ப்பா
முன்னவனா லென்றிகழ்தன் மூர்க்கமா—நன்னெஞ்சே
பன்னாளுஞ் சாதனத்திற் பண்பாக நின்றக்காற்
சொன்னவினை யேனிற்குஞ் சொல். (உச)

கலகங் கலகமெனக் காசினியி லுளருங்
கலக மியற்றுங் கருத்தார்—கலகமொழி
தீரமுடன் பேசுவதிற் றேர்ந்தா ரிவர்தம்மைச்
சேரற் றகாதென்றே தேர். (உரு)

சென்றதுநற் காலஞ் சிதைவுற்ற நல்லிளமை
யென்றடியேற் குய்யுநெறி யேயுமோ—மன்றதனி
னின்று நடிப்பானை நேர்ந்தறிவோம் வாநெஞ்சே
யொன்றறியா தானேமே யுற்று. (உசு)

மாதவத்தால் வேதங்கண் மாசறவே யோதியும்பின்
சீத மதியானைச் சேவித்தும்—பேதமறு
தாலடியிற் சின்முத்ரை யன்றுணர்த்த நால்வருமே
சீலநிலை பெற்றார்க டேர். (உஎ)

(ரு) கழிந்தநாட் பற்றிக் கருத்தழிந் திரங்கல்.

என்மயமா யுள்ளசுக மெட்டறியா தற்பசுக
முன்னித் தடுமாறி யூகங்கெட்—டன்னியத்தைப்
பன்னிப் பலபலவாம் பாவனையாற் கெட்டுநொந்தே
னன்னிலைக்கா ளாவதென்றோ நான். (உஅ)

சும்மா விருவென்று சொன்னான் பொருண்மொழியை
யம்மா வறியா தயர்ந்தேனான்—சும்மாக்கு
வெம்மாயை யின்கூத்தால் வேறுபட்டு நான்கெட்டேன்
சும்மா விருத்தலென்றோ சூழ்ந்து. (உகூ)

நெஞ்சிற் றுறவார் துறந்தார்போல் வஞ்சித்திங்
குஞ்சன் மனவழியே யோடுவார்—விஞ்சையறு
பஞ்சையரைக் கூடிப் பதரானேன் பல்காலு
நெஞ்சிற் கவலை நிலைத்து. (௩௦)

(௬) நிலையி னிற்க நெஞ்சிற் குணர்த்தல்.

அகமமதை யேக வறிவுருவ மாகி
யிகமதனி லேயிருக்க லின்றேல்—ககனஞ்
சுகுணமறச் சூழுஞ் சுரும்பினம்போ லென்றுஞ்
சகமதனில் வாழ்வதெனுஞ் சாற்று. (௩௧)

எக்கலையும் பொற்பாக வேசற் றுணர்ந்தாலுந்
துக்கநிலை யேகல் சுகந்தோன்றல்—பக்குவமா
நல்லா ரியணையன்றி நண்ணுமோ நன்னெஞ்சே
யெல்லாமா னான்றன்னை யேத்து. (௩௨)

வந்த பிறவிநிலை வாலறிவாற் றீர்ப்பதன்றிப்
பந்தமுறு கன்மத்தாற் பாழாமோ—வந்தமிலாச்
சந்தமறை கொண்டாடுஞ் சற்குருவைப் போற்றிசைத்தா
லந்தவழி யாகு மறி. (௩௩)

சென்றே யகமுகமாய்ச் சேட்டைக ளற்றிருப்பாய்
மன்றின் மயமாக மன்னிடுவா—யென்றென்றும்
பொன்றும் பொருளைப் பொருளல்ல வென்றுணர்வாய்
நின்றிடுவா யன்று நிலை. (௩௪)

பிறப்பிறப்பென் னும்பிணியைப் பெற்றுழலும் யாக்கை
மறுக்கவறி யாது மயங்கிக்—குறுக்கு
நெறிசென் றெவற்றுள்ளு நேயமதை வைத்துக்
குறியுறுத லென்றுங் குறை. (௩௫)

(௭) உலகினர் துயர்கண் டுள்ள மிரங்கல்.

உணர்வின் மயமே யுலகாகு மன்றே
லுணர்வின்றிக் காட்டி னுவப்போ—முணர்வுடையா
ரீனமறச் சொல்லி யினிதினிலை நாட்டிவைத்தா
ரேனறியீ ரிந்நிலையை யிங்கு. (௩௬)

மாயை வழக்கறுத்த வல்லார்க டம்மையிகழ்
மாயைக்கென் செய்வதுகாண் மாப்புலவீர்—வாயை

யடக்கிமனந் தன்னை யலையா தடக்கி
மடக்கிடுமின் சித்தத்தின் மால். (௩௭)

மலவடிவை நானெனலை மாற்றுது கற்று
மலவடிவி னுளு மகிழ்வீர்—சலமுற்ற
மாந்தரே பண்டிதப்பேர் வாய்க்குமோ நுந்தமக்கு
சாந்தநிலை பெற்றுய்தல் சால்பு. (௩௮)

நேற்றிருந்தா ரின்றுபட்டு நீறுதல் கண்டிருந்து
நாற்ற வுடல்வளர்க்க நாட்போக்கி—வேற்றுமைபட்
டெற்றுக்கோ நீவி ரிடருக்குள் சேர்கின்றீர்
பற்றற் றிருத்தல் பலம். (௩௯)

இம்மைச் சுகத்தி னியல்புணர்ந்தால் பின்னுகு
மம்மைச் சுகத்தி லயர்வுண்டா—நம்மியல்பு
கற்றுல் விளங்கிடுமோ காதலொடு மாநிட்டை
யுற்றுல் விளங்கிடுமே வுள். (௪௦)

(அ) அபர ஞான மறுதி யன்றெனல்.

அறிவே யுலக மறிவே யனைத்து
மறிவதனை யன்றி யறையோம்—பொறியில்லீ
ரேட்டுப் படிப்பதனு லென்றுணர்வீ ருண்மைநிலை
நாட்டும் புலமையதே நன்கு. (௪௧)

(௯) அடாஞா னியரி னநுசிதம் பகர்தல்.

உள்ளஞ் சுயஞ்சோதி யென்றுணரா ரோதுவது
கள்ளநிலை தன்னையே காட்டுமான்—மெள்ளவே
யுற்றறிவி னிற்போர்க் குடன்மயக்கு விட்டகலும்
பற்றுவிடார்க் கொன்றுமிலை பார். (௪௨)

ஞானவமு துண்ணுது நற்றவர்போற் ருமிருந்து
மோனநிலை காட்டுவான் முன்னிற்பா—னூனமுறும்
பொன்னுசை போக்காது போயுழல்வர் வீடுதொறு
மென்னுவா ரென்கண்ணுக் கிங்கு. (௪௩)

மாயைநிலை மெய்யென்பீர் மாமயக்கந் தீராது
மாயை தனையுணா வல்லீரோ—தூயவர்போன்
ஞானநிலை போதிக்கு நல்லறிவி லாதவரே
யீனநிலை யாவீ ரிசைந்து. (௪௪)

பக்குவத்திற் கேற்பப் பகருமே நான்மறைகள்
பக்குவத்தின் பாங்கறியார் பாழடைவர்—மிக்கறிவு
சால்புடையார் போலத் தமைக்காட்டி நூலுரைத்தன்
மால்பெற் றுழன்றதனின் மாண்பு. (சரு)

பன்னியர்கள் கற்பழிக்கப் பார்க்கின்று ரெப்போது
முன்னிப் பலகலையு மோதுகின்றார்—துன்னுகின்ற
சாத்திரங்கள் சொல்லச் சமர்த்தரெனக் காட்டுகின்றார்
பாத்திரமா காதிவர்தம் பண்பு. (சசு)

கட்டமறத் தந்நிலையைக் கண்டுணர்ந்து நில்லாதா
ரெட்டினரைப் போற்று திழிவுரைப்பா—ரிட்டமுட
னுண்டுடுத்தித் தூங்குவதே யோர்பொருளா யெண்ணிமகிழ்
கண்டகருக் குண்டோ கதி. (சஎ)

தன்னுருவை யோராச் சழக்கர்தா மிவ்வுலகின்
மன்னுருவை வேறு மயங்கினராற்—பின்னுலகைத்
தீர்ந்த வாதொன்றுத் தேர்ந்தறிவார் பாழாகார்
சீரனந்த மாவார் தெளிந்து. (சஅ)

போலியாஞ் ஞானிகளே போராட்டங் கொண்டந்தோ
வாலியைப்போன் றேநீவிர் மாளுகின்றீர்—சீலமற்றுப்
பாலிமுளை போலப் பயிராகித் தாழ்வானீர்
கூலிக் குழைத்துணனுங் கோள். (சகூ)

(கo) போய்யர் கோள்வது போலிவே டம்மேனல்.

குழைத்தணியு நீறுங் குணமா மணியுந்
தழைத்தநெஞ்சில் வஞ்சனையுந் தாங்கி—விழைச்சுற்று
வாயான் முணமுணத்து வஞ்சகமாப் பூசித்த
லாயாத சைவர்குறி யாம். (ருo)

இவ்வேட மித்தையா மென்றறிஞர் பாற்றுணியார்
செவ்வேடம் பூண்டு சிறப்பாகப்—பவ்வமெனத்
தாவுமுளத் தின்வழியே தாஞ்சென் றகங்களிப்ப
ரோவுநிலை காணுதா ருற்று. (ருக)

ஞானியெனத் தாநடித்து நல்லாசை யுட்கரந்தே
யானவையர் தன்னை யலைந்தேற்பீர்—தானமதிற்
கோலஞ்செய் யுண்மைக் குருவடிவை யேன்கொண்டீர்
சாலவுமக் கீதழகோ தான். (ருஉ)

பிறப்புமிகச் செய்யும் பெரும்பகையைப் போக்கத்
துறக்குநெறி காணத் துணியீர்—வறப்பிற்
பரமறிந்தார்ப் போலப் பகட்டுகின்றீ ருண்மைத்
திரமறியக் கல்லாது சென்று. (ருங)

வள்ள லுரைக்கும் வழியறியா தையகோ
விள்ளவரு வீருண்மை வேகமுடன்—மெள்ளவே
கள்ள மனமடங்கக் கண்டீரோ சித்துருவை
யுள்ளபடி யோர்ந்தீரோ வுற்று. (ருச)

மிளகாய்ப் பழம்போன் மிளிரமுகங் காட்டிக்
களவொழுக்க முள்ளே கரந்தீர்—பளகுடைய
சொற்கட்மைக் கூறத் துணிவீர் புறங்கூறி
நிற்றலிலே தாழீர் நிலைத்து. (ருரு)

வேடநெறி நில்லாது வேடம்பூண் டென்பயனும்
வேடங்கள் தோடம் விலக்கிடுமோ—பாடமதா
வேட்டைப் புரட்டுவதா லெய்துறுமோ சீருளுண்
ணூட்டங் கபோதிகளே நன்கு. (ருசா)

அக்குடனே காவி யழகுதரும் வெண்ணீறு
துக்கமறு சுத்தருக்கே சொந்தமா—மிக்கறிவா
யெக்கலையுங் கற்றுவிட்டோ மென்றிறுமாப் பார்க்காகா
ரக்கனரு ணூலியம்பு நன்கு. (ருஎ)

(கக) போலிப் புலவரின் புன்செயல் கூறல்.

ஓங்கார மெய்ப்பொருளி லுண்டாய காவியத்தை
யாங்கார நீங்காத வற்பரெலாம்—பாங்காகி
வாங்காதிங் கன்புநிலை வாய்த்துள்ள சற்சனர்போ
லீங்கிசைப்பா ரென்னு மிவர்க்கு. (ருஅ)

சித்தநிலை யீதென்னத் தேர்ந்தறியா ராய்ந்தவர்போன்
முத்தாரு ணூற்கு முரணுக—வுத்தி
யறுமுரையைக் கூறி யவலநெறி நிற்பா
ருறுபொருளைக் காணு ருகர்ந்து. (ருகூ)

பாகண்ட ராகிப் பகட்டுவீர் பாரதனை
மாகண்டந் தானதனை மாற்றகிலீ—ராகண்டத்
தார்கண்ட நம்பனைப்போற் சத்தார்த்த வாரியன்பா
லோர்திலையைத் தாமறியீ ருற்று. (கூ0)

கள்ள மதியைக் கரைத்துச்சின் மாத்திரமா
யுள்ளபடி நிற்குநிலை யோராது—பொள்ளறிவாற்
பெண்ணு ணலியென்று பேதையரா யெங்நாளு
நண்ணு துரைப்பதுவோ நன்று. (சுக)

பந்த மிருக்கப் பரமானுர் போனடித்துச்
சந்தகுணம் பந்தருக்குத் தாமளப்பீ—ரந்தகாரம்
பெத்தர்களே யீதறிமின் பேசறிவா நந்தநிலை
தத்துமனத் தார்க்குண்டோ தான். (சுஉ)

கொண்டதொழில் செய்துபொருள் கொள்ளுவான் போலந்தோ
தண்டப் படிப்பதனைத் தாம்விற்பீர்—கண்டபடி
கூலியே வாங்குங் குறிப்புடைய ரானீர்கள்
போலிநிலை யாநும் புலம். (சுங)

வழக்குரைப்ப தற்கும் வயிற்றுக்கு மாக
விழுக்குநிறை பாட்டை யிசைப்பீ—ரிழுக்காய்ப்
பழித்துரைப்ப தற்கே படித்தீர் புலவீர்
செழித்த வறிவினிலீர் தேர்ந்து. (சுச)

மட்கலங்க ளுடுநிறை வான்போலும் பூதத்தி
னுட்கலந்த பூமாவை யோராது—நுட்பமுடை
நாட்டம் படித்தார்ப்போ னன்று வுரைக்கின்றீர்
வாட்டமித னுற்போமோ வாய்ந்து. (சுரு)

(கஉ) பந்தநீங் குபாயப் பகுப்பினைப் பகுத்தல்.

தேகாதி பந்தமதாற் றீராத துக்கமதா
மோகாதி யாகு முாணுகுஞ்—சோகாப்பார்
சந்தேகத் தாக்கறுத்துத் தன்னறிவே தானுனற்
பந்தவினை நீங்கிவிடும் பார். (சுசா)

மாயையெனு மாமயக்கான் மாறு துணர்வழிந்தே
காயமெனும் பொய்யுருவிற் கட்டுண்டீர்—தூயவர்சொல்
சட்ட மறையின் றகுபொருளை யாய்ந்துணரின்
கட்டமெலாம் விட்டகலுங் காண். (சுஎ)

உற்றுணரிற் சீவ னுயர்பிரம மேயாகுங்
கற்ற செருக்குடையார் காணுர்கண்—முற்று
மொழியச் சிவமே வொளிரும் பவமே
யழியு மறுதியதே யாம். (சுஅ)

அறிவின் விளைந்த வளவின் மதமு
மறிவின்றி யாயுங்கா லாமோ—வறிவுருவா
யெம்மதமுந் தாமா யிருந்துரைக்கு நல்லோர்க்குப்
பொய்ம்மனத்தின் கட்டறுந்து போம். (சுகூ)

(கரு) நிட்காமியத்தா னேர்பய னுரைத்தல்.

முற்பிறப் பிற்செய்த முன்னுநிட் காமியத்தா
லுற்பவிப்பார் நல்லோ ருயர்புவியில்—பற்று
மலமலமா விட்சேப மாவரண நீங்கி
யிலகிடுவார் ஞானியாா யெண். (எ0)

(கச) உளமயக் ககல வுள்ள துணர்த்தல்.

உணர்வுநா மென்று ளசாட்சி நாமே
யுணர்வுமய மல்லாதிங் கொன்றில்—புணர்தல்
பிறிதல் வருதலன்றிப் போதலிவை யெல்லாம்
அறிவன்றி மற்றில்லை யாம். (எக)

உபாதிவயத் தாலே யுளக்கண் குருடாய்க்
கபாதியுடற் றுனைக் காண்ட—லுபாதி
சுபாவமிலா மாமறைப்பின் றேடமகன் றிட்டா
லபாவமிலா வான்மாவா மங்கு. (எஉ)

பூதாதி சோதனையாற் போதருமால் பொய்யறிவு
வேதாதி யோதுவதும் வேண்டுமால்—ஞாதாவா
மையனருள் செய்வானே லாகா தொருகாலு
மையலொடு சேரு மருள். (எரு)

வினைமூலந் தேகமென விட்டுணர்ந்து நின்றுன்
றனையறிவாய்க் காண்பனிது சத்யந்—தனைவிட்டு
வேண்டின் மனையாதி வீடறியா னுதலினல்
வேண்டுதல்வேண் டாமையறன் மேல். (எச)

சிதம்பரத்திற் றேன்றிச் செறியுலகந் தன்னைச்
சிதம்பரமாக் காணிற் சிதையும்—அதமில்
சிதம்பரத்தைக் கண்டு திருநடங்கொள் வாரே
சிதம்பரமா நிற்பார் தெளிந்து. (எரு)

குறிகடந்து நிற்கவெனக் கோலமறை கூறு
நெறியாவவ் வாறெருவ னிற்பி—னறிவாய்

விரிவாஞ் சகத்தொரீஇ மேனிலைநிற் பானல்
விரிதல் குவிதலற வே. (எரு)

அய்யமற வந்துசிவ ஞரியனைச் சொன்னவணம்
பய்ய வறிந்து பதைப்பற்றான்—மய்யலறும்
செய்ய சிதம்பரமே செவ்விதா கத்தோன்று
முய்யுநெறி யாகு முளத்து. (எள)

உள்ளபடி தன்னுருவா வுற்றிருக்க வேவேண்டிற்
கள்ளமறு நிட்டைதனைக் கைக்கொண்டு—சள்ளையற்று
மெள்ளமனந் தாண்டி விரிகின்ற சூனியத்தைத்
தள்ளில்சிதா காசமுறுந் தான். (எஅ)

சைவஞ் சிவத்தோடு சம்பந்த மாமென்பர்
சைவநிலை நன்குணர்ந்த சாதுக்கள்—சைவநிலை
வாசாம கோசரமெய் வாழ்வாகு மெங்குநிறை
தேசார் பொருளாகுந் தேர். (எகூ)

ஆலயமே காய மறிவுசிவ லிங்கமென
மூல ரருண்மொழியை முன்னோர்பால்—சால
வெளிகாண வாராயின் வெட்டவெளி யாகத்
தெளிவாஞ் சிதம்பரத்தின் சீர். (அ0)

உள்ளிருப்ப தாரென் றுரையென்னி லுள்ளிருப்போன்
கள்ளமின்றி நானெனன்பன் கட்டுடலை—யொள்ளறிவாற்
றெள்ளையுட னனென்று சொன்னவனை ரென்றுணரின்
மெள்ளவெளி யாகிவரு மெய். (அக)

ஈசனிலை யாயா தியற்றுங் கிரியையெனும்
பாச மகலுநெறி பற்றிநின்று—காசகன்று
தேசுற்ற தம்வடிவந் தேர்ந்தொளிரு மாதவர்க்குப்
பேசுமவ னேயீசன் பேசு. (அஉ)

மனவிகற்ப முள்ளளவு மாயா துலகு
மனவிகற்ப மோயினது மாயு—மனமுங்
கனமா மறிவாயின் கங்குல்பக லில்லா
தனவா யகன்றுவிடுந் தாம். (அங)

பற்றுகு மில்லத்துப் பானுவைப்போல் வள்ளுவனார்
பற்றகன்று சான்றான பாங்கறியின்—பற்றின்றி

யில்லறத்தில் வாழலா மேதமுறு தெஞ்ஞான்று
நல்லியல்பாற் காண்க நயந்து. (அச)

மனத்தின்கண் மாசற்று மன்னியக நோக்கை
யினத்துமய மாகா திருந்து—கனத்தசிவ
நானென்றென்று நாடிச்ச மாதிசெய்வா
ரேனுகா ரின்பவடி விங்கு. (அரு)

சாதனங்க ளில்லார்க்குச் சங்கானே மான்மமுவோ
டோதரிய நந்தியின்மீ துற்றுலு—மேதறிவார்
மாதவநாற் சாதனங்கண் மாறுபடா துற்றூர்க்கிங்
கேதவமாம் போதகமா மேய்ந்து. (அசு)

தத்துவத்தைத் தாண்டியதிற் றத்துவமா நின்றுனைச்
சுத்தமுறு மீசனெனச் சுந்தாரும்—பத்திமிக்கு
முத்தாங்தே வாரத்தான் முற்றுதித்தா ரந்நிலையைப்
பித்தொழிந்து காண்பதுவே பேறு. (அஎ)

(கரு) புன்புல வர்க்குப் பொருளுரை புகறல்.

சோதனையோ டெக்கலையுந் தோய்ந்தறியா தாய்ந்தவரை
யேதமுளா ரென்றிங் கிழித்துரைக்கும்—போதமிலாப்
புன்புலவீ ருண்மைப் பொருளுரைக்கு நற்குருவை
வன்பொழிந்து காணீர் மகிழ்ந்து. (அஅ)

மனதி லெதுவு மறந்திருத்த னன்று
மனதி னினைவுமல மன்னு—மனமழிந்தே
யெவ்வுருவுந் தானு யிடையறு தெப்போதுங்
கவ்வையற நிற்பாய் கதித்து. (அகூ)

மனத்தின் விகற்பமா மண்முதலாம் பூத
மனத்தின் வலிகெடுக்க மாளும்—வனப்புறுபே
ரின்பத் திருக்க விசையா தழிகின்றீர்
துன்புற்ற வாழ்வோ சுகம். (கூ0)

வேதம் பொதுவென்னு மெய்ப்பொருளை யோராது
பாதகமா கப்பழிக்கும் பாழ்ம்புலவீர்—தோதகமி
லாரண மார்க்கமெனு மன்பர்திரு வாக்குணர்ந்து
பூரணமா வாழ்க பொலிந்து. (கூக)

சாதியெனுங் கற்பனையைத் தானகற்ற தையகோ
வோதிப் பொருளுரைக்க வுற்றீர்க—ணீதியுடைக்
காதியென் பாள்கதையைக் காணாது மால்கொண்டு
வாதியென் பீர்நீர் வதிந்து. (கூஉ)

சர்வஞ் சிவமயமாய்ச் சாற்றிடும்வே தாகமங்கள்
சர்வமெனுஞ் சொற்பொருளிற் றம்வேறே—கர்வமுடன்
வீண்வாதஞ் செய்துவரும் வெள்ளறிவார் பண்டிதகேள்
காண்பானி னுண்மைநிலை காண். (கூங)

ஒப்ப வுலகனைத்து மொப்பில்சிவ மென்றருளு
மப்பர் திருவாக்கை யாழ்ந்தறியா—திப்புவிச்சீர்
கண்டவரைக் காணாது கண்டவரை நிந்திப்பீர்
பண்டைமறை தேர்ந்துணர்தல் பாங்கு. (கூச)

சும்மா விருக்கவைக்குஞ் சூத்திரத்தைக் காணாது
சும்மா விருப்பாரைத் தூடிப்பீர்—சும்மா
விருத்த லெளிதாமோ வேமாப்பென் செய்யும்
விருப்பமுடன் காண்பீர் விரைந்து. (கூரு)

ஐங்கோசந் தம்மு ளகப்பட் டறிவறியா
திங்குடலை யானென் றிறுமாப்பீர்—பங்கமிலா
தெங்குமுண ரான்மாவை யெட்டியறிந் தான்மோகந்
தங்காது பட்டிடுமே தான். (கூசா)

(கசா) அடங்கா தாரியல் பகல வியம்பல்.

கார்போன் றுளமனத்தார் கண்ணறியாச் செம்மாப்பர்
பார்முகமா நின்று பதறுவார்—தேர்முகமா
யாறுநெறி கண்டே யறிவானுர் சொல்லுவதைத்
தேறுகிலார் மாறுவர் செற்று. (கூஎ)

அற்பகுணந் தூர்ச்செய்கை யாழ்ந்தவர்க ளெஞ்ஞான்றுந்
தற்பரம மாநிலையைத் தாமிகழ்வார்—மற்பிடித்து
வாதாடித் தம்பயனை மாய்த்தனரே யல்லாம
லேதானுர் பாழானு ரிங்கு. (கூஅ)

மூட முறலான் முழுமதியொன் றில்லாத
கேடறி வாரோ கிளரறிவை—யோடலெனுந்
தோடமொன் றில்லாச் சுகரூப மானுரை
நாட வறியார் நயந்து. (கூகூ)

கல்வியறி வில்லாக் கயவரறி வுள்ளாரைச்
செல்வச் செருக்கதனாற் சிறிடுவர்—தொல்லுலகில்
வல்லா ரெனக்காட்டி வாய்ப்பினெறி சென்றிடுவர்
பொல்லா தனவே பொதிந்து. (கoo)

பற்றற்றாற் சீவன் பரவெளியா யம்பலமா
முற்றறியார் வேறா வுளனென்பர்—சிற்றறிவோர்
கற்றோ மெனச்செருக்கிக் கண்டபடி யன்னியத்தி
லுற்றே பிறழ்வா ருகந்து. (கoக)

வஞ்ச மனத்தார் வழக்குரைப்பா ரெவ்விடத்துந்
தஞ்சமென வந்தவர்சொற் றாங்கேளார்—நஞ்சுநிலை
நெஞ்சை யொளித்தென்று நேயர்போ னீண்டுரைப்பா
ரைந்தின்வழி யாயழிகு வார். (கoஉ)

என்னை யறியா திகழ்வாய் மலவடிவா
யுன்னை யறிந்தா லுரைசெய்யாய்—பின்னமுற
வென்னநீ சொன்னாலு மேகமே யுன்வடிவ
முன்னிலறி வாவா யுகந்து. (கoங)

மனவடக்கந் தன்னை மதியாது வாளா
கனவுடலைப் பொன்னாகக் கண்டு—தனுவளவா
நின்றீ ரறிவறியா நீள்படிப்பா லென்பயனா
மொன்றீர் புருடார்த்தத் துள். (கoச)

(கஎ) உறுதுயர் விளக்கு முடலிழி வுரைத்தல்.

சீழிரத்த மென்புதசை சேர்ந்தமலப் பொய்க்கூடு
தாழுமென வெண்ணமற் றானோம்பிப்—பாழுக்கே
சேமித்த பொன்பொருள்போற் சீராட்டிக் கண்டுருவைத்
தாமிருத்த நின்றிடுமோ தான். (கoரு)

நடக்க மலந்தளும்பி நாறிடுதே கத்தைக்
கடக்கவறி யாது கலங்க—லடுக்காம்
விடுக்கருமோ கத்தை விடுத்தா லகலுந்
தொடக்கமிலா நன்னிலையாந் தோய்ந்து. (கoசு)

உண்டிப் பெருக்கை யுபசார நன்மதிப்பைக்
கண்டிறக்குங் காயமதைக் காயமென—வுண்டுடுத்தித்
தண்டிக்குச் சுப்போலத் தாழ்வடைந்தீர் வாழ்வெங்கே
பண்டைநிலை காணல் பயன். (கoஎ)

(கஅ) உலக நோக்கறு முபாயங் கூறல்.

பகிர்முகநோக் காற்பொருந் தும் பாரசனின் றேற்றம்
பகிர்முகநோக் கற்றலே பாறும்—வகிர்தலறு
சத்தா மறிவே சகசாட்சி யாயிருத்தல்
சுத்தநிலை யீதென்றே சொல். (கoஅ)

நாத்தி யுலகமென நல்லோர் நவின்றிருக்க
வாத்திநிலை யாமோகா ணுய்ந்தறிமின்—பூத்துமலி
மாயவுட ருமென்னு மாயையற்றுச் சற்சித்தா
யேயநிலை காண்மி னிசைந்து. (கoகூ)

சிதம்பரம்வே றென்னுமதி தீர்ப்பதனை விட்டுச்
சிதம்பரத்தி னுள்ளுளவைத் தேறின்—வதமாஞ்
சிதம்பரத்திற் றேன்றித் திரியுமதி மக்காள்
சிதம்பரத்தைக் கண்டுணர்தல் சீர். (ககo)

(ககூ) அடங்காதார்க்கமைவுரை யன்போ டிசைத்தல்.

தேவிகா லோத்திரத்துத் தேர்ந்தான் சிவமென்று
கூவி யறைந்திருக்கக் கோமானுந்—தேவர்களே
தாவியுடற் கட்டறுத்துத் தாஞ்சிவமா காதலைந்தி
ரோவியம்போ லுள்ளுணர்வை யுற்று. (கககூ)

கண்ணன்சொல் கீதையைத்தன் கார்யார்த்த மாமெனவே
யெண்ணம்வே றுவா ரிசைக்கின்றார்—பண்ணமைந்த
கூர்மபுரா ணக்கீதை கூறுவதோர்ந் தாலுரையார்
தேர்மனமி லாதவர்க்கென் செப்பு. (ககஉ)

துடிபாவ நீங்காது சாதிகுணங் காண்பார்
படிமயமே யாயுற் பவிப்பார்—துடிகொளரன்
பாதம் வணங்கிடுவான் பஞ்சமனு னுமவன்
பாதம் வணங்குதலே பாங்கு. (ககங)

மாயைமெய்யா மென்று மதிமயக்கங் கொண்டச்சோ
வாவ வறியா தறிவழிந்திர்—தூய
நிலையறிந்து தேசிகர்பா னெஞ்சினிலை கண்டிங்
கலைவகன்றுன் மாயை பறும். (ககச)

பெத்தருக்கா மூன்றுபொருள் பேசிடும்வே தாகமங்கண்
முத்தர்சிவ மென்று மொழிவதனை—யுத்தியுடன்
கண்டறியா ருண்மைநிலை காய்மனத்தின் போக்கறுத்து
பண்டைநிலை காணார் பரிந்து. (௧௧௫)

கற்றுக்கேட் டுள்ளசிலர் காணு மொருவழியு
முற்றதுரைத் தாலுமிங்க னோரார்கண்—முற்றறிந்து
பற்றகன்றார் தம்மைப் பணியமனங் கூசிடுவார்
நிற்றலிவ ரேனோ நிலத்து. (௧௧௬)

(௨௦) நெஞ்சிற் கமைவுரை நேர்மையா நிகழ்த்தல்.

சாயையெனும் வாழ்குடும்பந் தன்னைச் சுமந்தாலு
மாயையெனு மேக மறைந்தாலுந்—தூயவொளி
தானுகி யெங்குஞ் சகசாட்சி நாமென்றார்
மானுகு வார்கண் மகிழ்ந்து. (௧௧௭)

மைந்தர்தமை வேண்டியே மாதீர்த்த மாடியந்தோ
மந்தமதி யாற்கலங்கி மாண்டிடுவாய்—சுந்தரமா
ரந்தமறைப் பெண்ணை யறிவாம்பு மானணையச்
சந்தசுக சந்ததியைச் சார். (௧௧௮)

முத்தி நிலையின் முடிவறியா மூர்க்கரைநீ
சத்தியமா நம்பித் தயங்காது—பத்தியினல்
சித்தினிலை காட்டிச் சிவாநந்த மாக்குவிக்கும்
புத்தியுள சற்குருவைப் போற்று. (௧௧௯)

மின்போலத் தோன்றி விரைந்தழியும் வாழ்வனைத்தும்
பன்னாளுஞ் சோதிப்பார் பற்றுகா—ரன்னதினல்
கல்லா லடியமருங் கத்தனென வாரியனு
நல்லானை நெஞ்சேநீ நாடு. (௧௨௦)

(௨௧) போலிச் சைவர்க்குப் பொருளுரை வகுத்தல்.

சைவர்யா மென்பீரோ சாந்திநிலை கண்டீரோ
சைவஞ் சிவமாத ருனன்றோ—சைவமற்றுஞ்
சைவர்யா மென்றுசொலித் தாரணிக்கேன் கூற்றானீர்
சைவத்தின் மாண்பறிதல் சால்பு. (௧௨௧)

வேடமெனச் சைவத்தின் வேடம்பூண் டீரந்தோ
வேடம் பொருளாமோ வீணுமே—தேடருநூற்
பாடம் பெரியோர்பாற் பாங்காகக் கேட்டறிமின்
றோடமெலா நன்ககலச் சூழ்ந்து. (௧௨௨)

நித்தன் பரமேசன் யானென்று நிச்சயிப்பான்
முத்தனல னென்றாலு முத்தனெனச்—சித்தமகிழ்ந்
தத்தன்கா லோத்திரத்தி லம்மைக் குரைத்ததனைப்
பித்துடைய சைவர்நீ பேண். (௧௨௩)

வேட்டியுந் தாழ்வடமும் வெண்ணீறும் பூண்டுமிகக்
கூட்டமதிற் சுந்தரமாய்க் கூடிநின்றுண்—ணூட்டமற்றுப்
பந்தமிலார் போனடித்துப் பாழ்ங்குழிவீழ் சைவர்களே
யெந்தவித மாவீ ரினி. (௧௨௪)

சரியாதி சாதனங்க டாழ்வின்றிச் செய்தல்
கரியாக வான்மாவைக் காணத்—திரியாக்
குறிசென்று நிற்கின்ற கூறறியா மாந்த
ரறிவினிலே காண்டலரி தாம். (௧௨௫)

(௨௨) வைணவர்க் குறுமொழி வாய்ப்புறக் கிளத்தல்.

தாயொக்கு நம்முருந்தன் றன்னுருவென் னம்மாழ்வா
ராய்வுற்ற நூனுட்ப மாயாது—தேய்வுற்றுத்
தம்பவுட ஞமக் தரிக்குஞ்சீ வைணவரே
யும்பர்நிலை சேறலென்றோ வுற்று. (௧௨௬)

(௨௩) தற்காப் பேவர்க்குஞ் சாதன மாமேனல்.

உடம்போ டிருந்து முடம்பின்மை காணத்
திடந்தா னெனக்களித்த தேவே—மடம்பாந்த
பொய்யுலகை மெய்யென்னும் பூரியர்பா னண்ணும
லய்யனே யேழையெனை யாள். (௧௨௭)

(௨௪) சைவ நெறியே யுய்யு நெறியெனல்.

பொய்யாகச் சைவநெறி புக்கோர்க்கு மெய்யாகத்
தெய்வச் சிவஞானஞ் சேராது—வையமிசை
மெய்யாகச் சைவநெறி மேவுவோர்க் கென்ஞான்று
மய்யமிலை சத்தியமே யாம். (௧௨௮)

தூலதனு நானென்றாற் சூக்கதனு தானுரோ
மூல தனுவெதுவா மோகமற்றுச்—சீலவென்பீர்
சால வுணர்ந்துரைமின் சற்றறிவா நின்றறிமின்
மாலகலு மோதம் வரும். (கஉகூ)

(உரு) கற்றறிவிலோர்க்குக் கழறியுரைத்தல்.

இச்சை யியல்பறியா யில்லுறைவா ருக்கறிவு
கொச்சையறி வாலிலெனக் கூறிடுவா—யிச்சைய
னிச்சைபர விச்சையா மிம்மூன்றுந் தம்முருவிற்
றுச்சமாக் கண்டார்க்கோ சொல். (கருo)

ஆண்பெண் ணலியா யழியுஞ் சடவுடலை
வேண்டிப் புகழ்தலோ மேற்கல்வி—காண்டகைய
தானதுவாய் நிற்குந் தாமறித லேகல்வி
மோனநிலை முற்றுமிதான் முன். (கருக)

(உசு) வைராக் கியத்தால் வரும்பல னுரைத்தல்.

பிரஞ்ஞானம் பிர்ம்மமெனும் பேசுமகா வாக்காற்
றிரஞான நானென்று தேருன்—வரமார்
விறன்மிண்டர் போல விடாதுவயி ராக்ய
முறஞானந் தானுவா னோர்ந்து. (கருஉ)

(உஎ) ஞான மேளிதி னணற்கே துரைத்தல்.

அலர்கசக்கு முன்னறிவா மாழ்மனத்தை வெல்லிற்
பலர்முன்னே துக்காம் படித்த—லலைவாலாம்
வாட்டமதை நீக்கா வழக்குறலா லென்னுகுங்
கூட்டமற்று நிற்றல் குணம். (கருங)

(உஅ) பொன்று நிலைபெறப் புலவர்க் குணர்த்தல்.

கற்பிப்பான் றனைக் கண்டுணரா தய்யகோ
விற்பனர்போற் கற்பிப்பான் வேறென்பீர்—மற்பிடிக்கு
மற்ப வுணர்வதனு லாகா திலைதுணர்தல்
கற்பிதமாம் பேதமெனல் கண்டு. (கருச)

சங்கற்பிப் பானைத் தவிரவிலை சங்கற்பஞ்
சங்கற்பத் தாலே சுகமாமென்—றிங்குணர்வார்க்
கெச்சாத் திரம்வேண்டு மெச்சா தனைவேண்டு
முச்சிதமா யீதறிவீ ரோர்ந்து. (கருரு)

ஆனந்தா தீதரென்ப ரன்புருவ மானவர்க
ளேனந்த மாகாம லிங்குழல்வீ—ரூனந்த
வானந்த மாய்நிற்ற லாராயா திங்கையோ
வீனங் குறித்தீ ரியைந்து. (கருசு)

நீர்க்குழிழ்நேர் தேக நிலைமையினை யாயாது
பேர்ப்பெரியர் யாமென்னப் பேணுகின்றீ—ரோர்ப்பரிய
வோர்வடிவா மான்மாவை யோர்நெறிக்கு வேறுனீர்
பேர்படிவ மேதாம் பிழை. (கருஎ)

இந்தவுடல் வந்தவகை யிங்கறைமி னேயர்களே
நிந்தையிலாச் சாட்சியா நின்றீரேல்—பந்தமறச்
சொந்தநிலை கண்டு சுகவடிவ மாவீரால்
விந்தைநிலை காண்பீர் விரைந்து. (கருஅ)

ஆத்ம சுகத்தி லமராது பாழாந்தே
காத்ம சுகத்தி லமர்கின்றீ—ரேத்துதற்காஞ்
சாற்று மனுபவத்தைத் தம்மேட்டிற் கண்டுணர்மின்
போற்றும் படிப்பென் பொருள். (கருகூ)

சத்தியமா நற்சிவத்தைத் தன்னுருவா கக்கண்டு
புத்தியுட னிந்நிலையைப் போதித்தே—னித்தநித்தம்
பத்தி யுடனதனைப் பார்த்துணர்மின் பண்டிதர்காள்
புத்திநிலை மாறுதன்முன் புக்கு. (கசo)

தேடிச் சுகத்தைத் திரிவீ ரதிதூர
நாடிற் சுகமயமே நம்முருவ—நேடி
யகமுகமாய்த் தம்மைத்தா மாராயக் கல்லீர்
சகமுகத்திற் றூக்குண்டீர் தாம். (கசக)

புத்திசங் கற்பமதே பொய்யவிச்சை யாகுமதால்
புத்தியறி னம்முருவாம் பூமாத்தா—னித்தை
மறுத்தார்க் கிடமெங்கே வாயடங்கி யுய்மின்
றிறத்தாரின் முன்னே சிறந்து. (கசஉ)

தெரிவின் மயமே செகத்தாகு மன்றேற்
றெரிவை விடவுலகு செப்பும்—பிரிவாக
வோராம லிந்நிலையை யுத்தேச மாதியினாற்
பாராம லோதுவது பாழ். (கசங)

தங்கு நிதியுடனே தாரணியை யாண்டாலுந்
துங்க மிலையழியுஞ் சூழ்ந்தறிமின்—சங்கையறப்
பொங்கு சுருதிமொழி புண்ணியர்பால் கேட்டறிந்து
பங்கமற நிற்பீர் பரிந்து. (கசச)

அருக்கன் வருமுன் னரும்பனிதா னீங்குந்
திருக்குருவ மானாற் சிதறும்—பெருக்குலக
மில்லை யடிமயக்க மீதறிமின் பண்டிதர்காள்
சொல்லுநெறி நன்றாகச் சூழ்ந்து. (கசரு)

சத்தியமே சித்துருவந் தானதுவே யீதுண்மை
நித்தமுமே சாதனத்தி னேர்ந்தறியின்—புத்திமுத
லத்தனையு மித்தையதா மாரணமு மீதுரைக்கும்
பத்தியொடு காண்மின் பரிந்து. (கசசு)

தானே சிவமாந் தனிச்சிவம்வே றில்லையென
மோனநிலை முத்தர் மொழிந்திருக்க—வீனமதா
லீதறிய மாட்டா திரும்வழக்கிட் டேயழிவர்
சாதனத்தி னில்லாதார் தாம். (கசஎ)

செம்மைவடி வின்னதெனத் தேர்ந்தறியா தேயுழல்வீ
ரம்மைதனி லென்செய்வீ ரையகோ—வுய்யுநெறி
கண்டறிமி னாரியன்பாற் காலம்வீ ணாகாது
பண்டைநிலை யாவீர் பரிந்து. (கசஅ)

ஈசனவன் வேறென் றிருமாந்திங் கேமாந்தீர்
பேசுமவ னீசனன்றோ போறிவீர்—மாசின்மறை
தேசுற் றறைவதுநீ செய்யசிவ மென்பதனை
வேசற் றறிமின் விரைந்து. (கசகூ)

சிவன்றானா வெங்குஞ் செறிந்துவிளை யாட
வவநினைவைத் தான்கெடுக்கா தானீர்—நவமாந்
தவமாகச் சாதனத்திற் சார்ந்துதம் மேட்டிற்
பவமாறப் பார்ப்பதுவே பண்பு. (கருo)

ஆசற் றனுபூதி யான்றோரை யாழ்ந்தறியப்
போய்ச்சற் றடைந்துநின்று போற்றுவிரேற்—றேசுற்ற
போதநிலை நன்குணர்ந்து புன்மயக்கி னின்றகல்வீர்
வேதநெறி யாலே விரைந்து. (கருக)

நனவுதனை யின்னதென நாடின் றிறமா
வினவு கனச்சுழுத்தி மேவா—கனமாப்
பனவுதற்குத் தக்க படிவங்கொண் டீரே
சினமறவே நாடிடுமின் றேர்ந்து. (கருஉ)

பத்திநிலை யுற்றறியப் பாங்காக வாகமநூ
லுத்திபெற வெம்மீச ஞேதிரு—னித்தரையின்
முத்திபெற வேண்டின் முதுமறைசொல் காரணமாஞ்
சித்தியுறக் காண்மின் றெளிந்து. (கருங)

பந்தமய ரூனகலப் பற்பலநூற் பண்டிதரே
சந்தமதாத் தோத்திரங்கள் சாற்றுவதென்—பந்தமரு
தெந்தவிதத் தாயினுமே யீதறிந்து ஞானநெறி
சிந்தைதனிற் கொண்மின் றெளிந்து. (கருச)

உற்றுற்றுண் ணோக்கி னுதியாது தாசோகஞ்
சற்றுவிகற் பித்தாலோ தானுண்டா—நற்புலவீ
ரன்னம் பிரித்துண் ணு மான்பாற்போ லான்மாவை
மன்னி யனுபவித்தன் மாண்பு. (க[illegible])

அளிக்காவிற் றண்டே னருந்துமா போலக்
களிப்பாக ஞானரசங் காண்மி—னெளிப்பிற்
றெளிதலிலே நாணுளுந் தேரினலீ துண்டாம்
வளியுமன மானர்க்கோ வம்பு. (கருசு)

பித்துப் பிடித்தவர்போற் பேச்சிற் சலியாதீர்
சத்தசா லத்தாற் றளர்கின்றீர்—பத்திபிலீர்
சுற்றித் திரிந்து சுகமிழந்தீ ரையகோ
மற்றினியென் சொல்வீர் மகிழ்ந்து. (க[illegible]எ)

சங்கையறத் தன்னேட்டிற் ரூனுணா தன்னியத்திற்
பங்கமற நிற்கப் பகருமோ—துங்ககலை
தங்க வுணர்ந்தாலுந் தன்மயமெங் காம்புலவீர்
பங்கினிலை கொண்மின் பரிந்து. (க[illegible]அ)

சீவனிலை யீசனிலை சீரில் சகத்தினிலை
தீவிரமா நல்லோர்பாற் றேர்ந்துணர்மின்—றேவனிலை
தானே விளங்கிடுந் தங்கும் பலவுருவாய்
வானேறி வாழ்வீர் மகிழ்ந்து. (கருகூ)

சத்தென்ப தொன்றேயாம் சார்மூன்று காலத்து
மொத்திருந்து மாறா துணர்வதுவாஞ்—சத்தினியல்
போராது சத்துபல வுள்ளவென மாறுவீர்
சேரவ தென்றே தெளிந்து. (கசுo)

தொந்தமதாம் பந்தமுத்தி தோற்றுவது நம்மயக்காற்
சந்தமுறு வேதமிதைச் சாற்றிடுமால்—பந்தமிலை
சும்மா விருக்குங்காற் றோன்றுமே யில்லையென
வெம்மயக்கு மில்லை யிதில். (கசுக)

உள்ளுணர்வி லாப்புலவீ ரோதிலென்னு ஞானநூ
லுள்ளஞ் சுயஞ்சோதி யோர்வீரேற்—றெள்ளியறி
வானந்த மாய்நிற்பீ ராகீ ருலகியல்பு
மோனந் ததும்பிடுமே முன். (கசுஉ)

உண்மையென்ப தான்மாவே யோதுலகு பொய்ப்பொருளே
திண்மையதா நாளுந் தெளிந்துணர்மி—னுண்மயக்க
நீங்கு முபசாந்தி நிற்கும் பிறழாது
தேங்குஞ் சிவானந்தத் தேன். (கசுங)

ஓடி யுழைத்தீ ருடம்பினிலை யோராது
பாடிப் பிறரைப் பகட்டுகின்றீர்—கேடுயிர்க்கு
நாடிநின்றீர் நானெனலை நாடாது வீணுனீ
ராடிமய மானீ ரலைந்து. (கசுச)

விடைகொடுத்து நீர்கேளீர் வேடிக்கை யென்பீர்
சடநோக்க நீங்காச் சழக்கீர்—மடமையினாற்
போலிவடி விற்கே புகழ்புரிந்து மெய்ம்மறந்தீர்
சாலப் படித்தென்ன தான். (கசுரு)

படித்துநிலை நிற்காத பண்டிதர்காள் கேண்மின்
படித்துணர்ந்து நிற்றல் பயனே—நடித்துப்
படித்துமய னீங்காமை பாங்கோ வடித்துப்
படிப்பானைப் பாராமை பாழ். (கசுசு)

தன்னை யளக்கிற் சகத்தினுரு தான்விளங்குந்
தன்னுருவோ கோசமன்று தானறிவாம்—பன்னூலை
யுற்றோரா தேன்படித்தீ ருத்தமரா யிக்கணமே
பற்றுநிலை பாரீர் பரிந்து. (கசுஎ)

அவத்தை மயமா வறிவறிந்தீர் வாளா
வவத்தை நிலைகடக்க வாற்றீ—ரவத்தையினுற்
றோன்றுவது மாய்வதுவுந் தொல்லை யறிவிலென
வூன்றியுணர்ந் தாலவைபோ முற்று. (கசுஅ)

உடருமாக் காண்போர்க ளுண்டோ துயிலி
லுடலுணர்வா லுற்றுணா லாமோ—திடமாகக்
கற்ற செருக்கதனுற் காண்பதிலை யோர்முடிவு
முற்றுணர்வை யோரீ ருவந்து. (கசுகூ)

மதத்தான் மதிகெட்டு வாளாகப் போவீர்
மதத்தின் வழக்ககல மாட்டீர்—மதச்செருக்கற்
றந்தர்முக நாட்டத் தயலற்று நின்றக்காற்
சிந்தைசிவ மாத றிணம் (கஎ0)

இல்லதிஃ துள்ளதிஃ தென்றுணா மாட்டாதீர்
நல்லறிவை யென்றுநீர் நாடுவிரோ—கல்விநிலை
யொத்துணர்ந்த வுத்தமர்பா லுண்மைநிலை கண்டுணரின்
மத்தமதி யோடழியு மால். (கஎக)

ஆரியனுர் சொன்னவண மாய்ந்தாய்ந் துழைத்தார்க்குச்
சீரினிலை யாமனந்தான் றேயுமே—பாரதனிற்
றேடுகின்ற நம்மையன்றிச் செம்பொருளெங் கேபுலவீர்
பீடுபெற நிற்றலே பேறு. (கஎஉ)

சரியையது தானே தருமுத்தி யென்று
புரிவதனிற் கொள்ளும் புலவீர்—விரியு
மனங்குவியச் சாதனங்கண் மற்றுமிருப் பானேன்
கனம்பெருகக் காண்பீர் கசிந்து. (கஎங)

அற்றூர் பசியகற்று மன்புடையார் போனுளுங்
கற்றறிய வேண்டினர்க்குக் கல்விதனை—யுற்றுணர்த்திப்
பற்றகலக் காட்டிப் பாமாக்கு விக்கிறுமைப்
பற்றிப் பணிவோம் பயந்து. (கஎச)

உள்ள மறியீ ருழைப்பறியீ ருள்ளளவுங்
கள்ள மனமுடனே கற்றுழந்தீ—ரெள்ளளவு
மெள்ள வுமையறிய மேவினீ ரில்லையுமைக்
கொள்ளு மயலொழிக்கக் கூர்ந்து. (கஎரு)

தானான தன்மயமே தாக்கற்று நின்றவிட
மூனுரைத் தாமென் றுவக்கின்றீர்—கானகத்து
தேனழிப்பார் போறகற்றுத் தேர்க்துங் குருடானீ
ரானபய னென்றுமிலை யாம். (கஎசு)

சைவமொடு வைதிகத்தைத் தாஞ்சாற்று நான்மறைகள்
சைவமனச் சுத்திசெயுஞ் சால்பாகு—நைவதிலா
வைதிகந்தான் றெய்வநிலை வாய்த்தற் குறுப்பாகும்
வைவதெனோ மாண்புடையீர் மற்று. (கஎஎ)

தெய்வநிலை யின்னதெனத் தேர்ந்துணராப் பண்டிதரே
யெய்வனுண்மை யம்பதனை யீதுணர்மின்—றெய்வநிலை
மூவவத்தை யிற்கரியா மூதறிவே யாமுண்மை
கேவலமே நல்லோர்க்குக் கேள். (கஎஅ)

தொல்லுலகு சத்தாயிற் றோன்றி மறைந்திடுமோ
நல்லுணர்வி னண்பர்களே நாடிடுமின்—றொல்லுணர்வா
நின்ற நமையன்றி நிற்பதிலை யெவ்வுலகு
மன்றவீ துண்மை மதி. (கஎசு)

ஏட்டைப் படித்துவந்தே யிங்கொழித்தா னன்னூலை
நாட்டம் படிப்பதென்றோ நாவலரே—நாட்டமிலா
நாட்டத்தை நாடி நடுநிலையி னின்றக்கால்
வாட்டமறும் வாழ்வுவரு மன். (கஅ0)

நித்திரையிற் செத்தபிண நேருமுட லென்றறிந்துஞ்
சத்தியமாக் காணலதைச் சால்பன்று—முத்தியெனுஞ்
சித்திபெற வேண்டிற் சிவபா வனைசெய்மி
னுத்திக் கிசைய வுவந்து. (கஅக)

கேட்டல்சிந் தித்தலொடு கேடிணிட்டை சந்ததமு
நாட்டம்வே ருக்கா நண்ணுவிரேல்—வாட்டமறுந்
தேட்டந் திரண்டிருண்டு சேருமே பந்தமறக்
காட்டக் கொழுந்ததுபோற் காண். (கஅஉ)

சந்தமறை யாராய்ச்சி தாழ்வின்றிச் செய்துவரின்
மந்த மதியகன்று மாண்பாகும்—பந்தமறுஞ்
செந்தா மரைக்கண்ணர் சீரயனு ரீச்சுரனுர்
நந்தாத கீதையுன னன்கு. (கஅரு)

பன்னிலேயே சும்மதத்திற் பாழில்சுகங் கிட்டாது
முன்னிலேக்குச் சேர முரணுகும்—பின்னிலேயின்
வல்லாரே நீங்களுங்கள் வாய்மதத்தை விட்டாற்றுன்
பெல்வாம் வெயின்மஞ்ச ளே. (கஅச)

ஆன்மசுகம் போலாமோ வாகாரத் தாகுசுக
நோன்மையினு லுண்ணுேக்கை நோக்காதீர்—சான்ருயின்
பாலே வனத்திற் பழுத்த கதலியொக்குந்
தாலச் சுகத்தின் றரம். (கஅ௫)

காலமொடு தேயவத்துக் காசற்று நிற்பதென
வேல வுரைக்கு மெழிற்புலவீர்—சாலவுனீ
ரோயாது நேரு முறக்கத் தவையுண்டோ
வாயார்க் கிதுநிந்தை யாம். (கஅசு)

அயமான்மாப் பிர்ம்மமென வான்றமறை கூற
வியல வறியாதே யேங்கி—யயர்வாகி
வைத்த குறியை வணங்கிமேற் போகாது
பித்துடைய ரானீர் பெரிது. (கஅஎ)

(உகூ) சற்குரு மொழியின் சதுரப் பாடு.

கண்ணுக் கினிதாய்க் கருத்திலுறு மெய்த்தெளிவே
யெண்ணம்வே றுனவருக் கெட்டானே—திண்ணமுடன்
றன்னேரி லாதரிய தற்பரனே நின்மொழிமு
னென்னும் பிறர்மொழிக ளிங்கு. (கஅஅ)

மூத்தாப மும்முடற்கே மோக்கநில் நீயேயென்
றத்த னளித்த வருண்மொழியா—லெத்திறத்தும்
பொத்தையுடற் கன்னியமாய்ப் பொன்று வுருவானேன்
சத்தியமே சத்தியமே தான். (கஅகூ)

(௬0) அனுக்கிரக மாட்சியி னமைவைப் பரவல்.

கர்மாதி யாலே கருத்தழிந்த கிழோனைச்
சாமாறில் லாதநெறி சார்வித்த—கோமானே
பூமாநீ யென்றெற்குப் போதித்த நாண்முதலாச்
சாமாறு கண்டறியேன் ரூன். (௧௬0)

(௬௧) உபதேசப் பாகுபா டுணரக் கூறல்.

ஆதியந்த மில்பாத்தி னண்டமுற்றுங் கற்பிதமென்
ரேதி யுலகியலை யுன்னவொட்டார்—காதலுடன்
பார்த்தறிவ தெல்லாம் பரமா விளங்குதற்குத்
தீர்த்தநிலை செப்பிடுவார் தேர். (௧௬௧)

ஏகாந்த மின்னதென வெட்டவறி யார்சுத்த
வேகாந்தம் பெற்றூர்போ லீங்கிசைப்ப—ரேகாந்தந்
தேகாதி சங்காதஞ் சோறு சித்துருவாய்
மோகாதி யற்றநிலை முன். (௧௬௨)

அடுத்தமய மாதல்சீ வான்மாவின் றன்மை
யடுத்ததனை விட்டா லறிவாந்—தொடுத்துவரு
நல்ல நடுநிலையி னுமசங்க மாநின்ருன்
மெல்லச் சுகந்தோன்று மே. (௧௬௩)

வம்புமதப் பிச்சரைப்போல் வாயுரையா லென்பயனுங்
கம்ப மனத்தின் கதியடக்கிச்—செம்பொருளாந்
தன்னையன்றி யெள்ளளவுஞ் சத்தியமா யில்லையென
வுன்னிநிற்பாய் மாணு வுவந்து. (௧௬௪)

பாசமெனும் பஞ்சைப் பகாறிவா றற்றழலா
ஞசமுறச் செய்கின்ற நற்குருவே—மாசிலவாந்
தேசத் திருத்திச் சிவானுபவத் தின்னிறுத்தி
பாசற் றிருக்க வருள். (௧௬௫)

சும்மா விருவென்று சூக்குமமா யோர்மொழியா
லிம்மா நிலத்தி லெழுந்தருளி—யெம்மானு
மம்மா நிலையடியேற் கன்புடனே யீந்ததனாற்
சும்மா விருந்தேன் றுணிந்து. (௧௬௬)

உத்தமத்தி லுத்தமமா யோங்குபெரு நிட்டைதனைக்
கத்தனே யானடையக் காட்டென்னச்—சுத்தமிகு
கண்ணிமைக்கு நேரத்திற் காட்டி யருள்புரிந்தான்
கண்ணிமைப்பிற் கண்டேன் கனிந்து. (௧௯௭)

கொண்ட சமாதிசெயின் கொல்பகைஞன் போலுறக்கந்
தண்டாது வந்தங்தோ தாக்கிடுமால்—கண்டதனை
முற்பட்டு நோக்க முறியுமப் பாவின்பாஞ்
சிற்பரம மாத றிடம். (௧௯௮)

சத்தியமா யாக்கையுயிர் சங்கையறக் கைக்கொண்டு
முத்திதரும் பாத முடிவைத்துச்—சுத்தமொழிச்
செங்கோலென் கைகொடுத்துச் சிற்பரத்தை யாளென்று
பங்கமிலா மற்பணித்தான் பார். (௧௯௯)

சிதாகாய மாவொளியிற் சிந்தனையற் றேநான்
சதானந்த மாகிச் சரிக்கப்—பிதாவாகித்
தன்னை யளித்த தகுமுதவிக் கோர்கைம்மா
றென்னையன்றிக் காணே னினி. (௨௦௦)

பொய்யுடலை மெய்யென்றே போற்றியே மெய்யுருவை
யையமறக் கொள்ளா தழிந்தேற்கு—மெய்யதனை
யுய்யுநெறி யாக வுணர்வித்தா னற்பரமன்
வையமிசை மானிடனாய் வந்து. (௨௦௧)

அய்யமற வேழையினை யாட்கொண்ட மெய்ப்பொருளாந்
துய்யனே நின்னையன்றிச் சொல்லறியே—னுய்வகையைப்
பய்ய வறிந்தேன் பயமகன்றே னின்னருளாற்
செய்கிரியை யொன்றுமிலேன் றேர்ந்து. (௨௦௨)

வேதாக மத்தின்முடி மேல்விளங்கும் பூரணமே
சாதா ரணமாகத் தான்வந்து—பேதாதி
வாதாட லோட வலிந்துவந் தாண்டதுகாண்
மீதாடி நிற்க விரைந்து. (௨௦௩)

அஞ்ஞானச் சேற்றின்க ணாழ்ந்துழன்ற நாயேனை
மெய்ஞ்ஞானத் தாலெடுத்து மேல்விட்டா—னெஞ்ஞான்றும்
பொய்ஞ்ஞான மற்று புனிதாநந் தத்தமர்ந்த
செய்ஞ்ஞான தேசிகன்முன் றேர்ந்து. (௨௦௪)

வஞ்சப் புலன்வழியில் வாழ்விழந்த யானின்றே
தஞ்சமென வுன்னருளாற் றுணனே—னெஞ்சலிலா
வஞ்சற் காத்தை யடியேன் றலைவைத்த
வெஞ்சலிலா வையாக்கண் ணே. (௨0௫)

ஐயுணர்வு மோருணர்வா யாங்காங்குக் கண்டுணரத்
துய்யதிரு வாக்கதனாற் றாக்கியே—மையுடனே
யய்யமெலாம் போக்கியெனை யாண்ட பெருமானே
செய்யறியேன் கைம்மாறு தேர்ந்து. (௨0௬)

(௩௨) மஹான்க ணிலைசொல வரம்புண் டோவெனல்.

அகமுகத்தி லெப்போது மாராய வல்லார்
சகமுகத்தில் வீண்டருக்கஞ் சாரா—ரிகமே
சுகமோன நன்னிலையிற் சோராத மேலோர்
பகலிரவைப் பற்றுவரோ பார். (௨0௭)

பார்வடிவை மாறாது பற்றித் திரிந்தாலுங்
கார்வடிவ மாவரோ கண்ணுடையா—ரோர்வடிவா
யாறாறுந் தாண்டி யவாவவரைப் போலிருப்பர்
மாறாத வான்மநிலை வாய்ந்து. (௨0௮)

ஏதேது வந்தாலு மின்புற் றிருந்தாலு
மேதேது மாகா திருந்தாலுஞ்—சோதி
வெளிமயமே யாய்விளங்கும் வித்தகர்தாஞ் சோரா
ரொளியநெறி தன்னி லியைந்து. (௨0௯)

மூடரைப்போல் வாழ்ந்திருக்கு மூதறிவோர் தம்மையெலா
நீடுசெட நோக்குடையார் நேர்ந்தறியார்—காடு
மவரவரைப் போல்வா ரழுவார் சிரிப்பார்
தவஞானி யாவார்க டாம். (௨௧0)

சொற்சொரூபந் தாமாகச் சோதித்த நன்முத்தர்
யற்புடனே யென்று மடிபணிவார்—பற்பலவாந்
துக்கமெலாம் போக்கித் துகளறவே யன்புநிலை
பக்கணமே காட்டிடுவா ராம். (௨௧௧)

சுகதுக்கந் தாக்காத் துறவுடையோர் நாளுஞ்
சகமுகத்தார் போலச் சரிப்பா—ரிகமதனிற்
கம்பத்தின் மீது கழைக்கூத்தன் போனடிப்பார்
கம்பமு நோக்ககலார் காண். (௨௧௨)

தாவுமிகு பார்வையொரீஇத் தாக்குழு வேடணையற்
றேவியதி பம்போ லொருப்படுத்தி—மேவுமுளக்
காட்சியொடு காண்பொருளைக் காண்பா னெனக்கண்டு
மாட்சியொடு நிற்பார் மகிழ்ந்து. (உகங)

சந்தையிடை யுற்றுஞ் சலியார் சமுசார
நிந்தையிடை நின்று நிலைபிரியார்—தந்திரமாய்
பந்தமுளார் போலப் பகர்வா ரவரவர்க்குச்
சந்ததமுஞ் சித்தானர் தாம். (உகச)

ஏதேது செய்தாலு மீனருடன் சேர்ந்தாலு
மாதருடன் கூடி மகிழ்ந்தாலுங்—காதலற்றுச்
சோதனையாந் தந்நிலையிற் சோரார் பாமுத்தர்
காதலர்கள் போலாவார் காண். (உகரு)

காதலுறு நம்மோடு காமியர்போ னிற்பார்க
ளேதமிலா ஞானியர்க ளெஞ்ஞான்றும்—பாதகமின்
மாதர் குடந்தாங்கி வாய்பேசி வந்தாலு
மோதுள்ள நீர்க்குடமே யோர். (உகசு)

பொய்யருடன் கூடியே பொய்ந்நடிப்புச் செய்தாலுந்
துய்யர் துகளொன்றுந் துன்னர்கள்—வெய்யவனற்
கானலா றேடிவரக் கண்டாலுங் கண்டறிந்தோர்
பானம் புரிசெயலில் பார். (உகஎ)

தத்துவத்தின் கூட்டமெலாந் தாமல்ல வென்றகற்றிச்
சுத்த நிலையதனிற் றேய்ந்திருப்பர்—சித்தமதி
லத்தனென வாரியனை யன்பா நினைந்திருப்பர்
சித்தஞ் சிவமாத் தெளிந்து. (உகஅ)

அரியணையி லார்ந்தாசிங் கன்பாச்செய் தாலும்
விரிவாகும் வீடுமுதல் விட்டிங்—குரிமைப்
பரிவில்லாப் பிச்சையினைப் பாங்காவுண் டாலு
மரியினது நோக்கமறு ராங்கு (உகக)

கூடமும் வெளியுநன்று கண்டுபிரித் தாற்போற்
சடமு முணர்வுமிவை தம்மைத்—திடமாகக்
கண்டு பிரித்துணர்ந்தார் காயத்தின் பற்றகன்று
ரண்டமென நிற்பா ரமர்ந்து. (உஉ0)

இல்லறத்தின் மெய்ஞ்ஞான மெய்துறுமோ வென்றென்று
நல்லறத்து ஞானியர்போ னன்குரைப்பீ—ரில்லறத்தின்
முன்னை வினையகன்ற முத்த ரநேகரென்ப
தன்னையறி வள்ளுவரே சான்று. (௨௨௧)

(௩௩) மாயா சொரூப வகையினை நவிற்றல்.

இம்மாயை வல்லபத்தை யிங்கறைவன் கேட்டுய்மின்
பெம்மானெங் கோனளித்த பேருளா—லிம்மாயை
யுற்ற பொருளு முருதபொரு ளும்மாகா
துற்றபல பேதமா முன். (௨௨௨)

மாயைக் குருவ மயக்காகு மற்றென்று
மாயமாய்ப் போயதெனன் மற்றென்று—ஞாயமின்றிக்
காயமதைத் தானென்னல் காண்பானை யில்லையெனல்
சேயசிவம் வேறென்னல் செப்பு. (௨௨௩)

சொச்சொரூப மின்னதெனத் தோன்று வகைமறைக்கும்
பிச்சுருவ மாவுயிர்க்குப் பீழைசெயுஞ்—சொச்சொரூப
மாகிநின் றூர்பா லணுகாது மாய்க்தொழியும்
பாகியநோக் கார்க்கிதனின் பற்று. (௨௨௪)

(௩௪) மாயையை யகற்று மாண்பினைக் கூறல்.

பாசமற வைங்கடிகை பற்றற் றறிவுதனை
மாசற் றருச்சிக்கு மாண்புவரின்—றேசுடைய
வானந்த மேயோங்கு மல்லல்செயு மாயையது
போனவிடந் தோன்றாது போம். (௨௨௫)

(௩௫) அநுபவ மாட்சியி னமைவினை யறைதல்.

உணர்வி னிலேச முலகு மதமு
முணர்வினைவிட் டெப்பொருளு மோரோ—முணர்வரிய
வங்கே யதைநினைந்தா லங்கதுவே நாமாவோஞ்
சங்கைவே றுண்டோ தவிர். (௨௨௬)

சங்கார்தந் தீர்ப்பினைப்போல் சாற்றுமொரு நூல்காணே
மிங்கிதன்மு னேவர்தீர்ப் பென்னுகும்—பங்கமறச்
சோதித்துக் காணச் சுகரூபந் தானதுவாம்
வாதிக்கின் வேறென் வழங்கு. (௨௨௭)

தானேதா னுயதது தானன்று நின்றததிங்
கேனோ விதையறிய வெத்தடையோ—மானிலத்தின்
மானிடராய்த் தோன்றி மாமிருகங் கல்லொத்திங்
கேனிடர்க ளுற்றலேவீ ரின்று. (௨௨௮)

ஊனுடலை யானென்னு முன்மத்த மக்கடமக்
கான சுகநிலைய தாகுமோ—ஞானமின்றிப்
பாவனந்தங் கற்றதனுற் பண்புறுமோ மாப்புலவீர்
பாவனையை நீக்குவதே பண்பு (௨௨௯)

சுத்தநிலை யாழத்தைத் தூயவர்பா லாய்ந்தறியீர்
மத்தவறி வானீர் மதித்திருப்பீர்—பித்தா
யுணர்வனுவாக் கண்டளப்பீ ரொப்புவரோ நுஞ்சொ
லுணர்வுடைய வுத்தமர்க ளூற்று. (௨௩௦)

நிலேமயக்க நீங்காது கற்றுணர்ந்தீர் கேண்மி
னலேகடல்போற் றுன்பென் றகலு—முலைவில்சிவ
நாமா யிருப்போமே னண்ணிடுபந் தங்களறும்
பூமா வினைப்புகழ்ந்து போற்று. (௨௩௧)

ஈண்டணுக்க டம்மை யிலங்கு சிவமாகக்
காண்டற்கோ ராரியனைக் காணுவாய்—தூண்டிமிகத்
தாவாபா சங்களறத் தத்துவஞா னத்தையுற
மூவாச்சாத் வீகத்துண் மூழ்கு. (௨௩௨)

தீராத வல்வினையைச் செவ்வியநோக் காலொழித்துப்
போாத ஞானநெறி பேயேற்குச்—சீராகக்
கூறி யருளியநற் கோமான்றன் பொற்றுளைத்
தேறியடைந் தேனல்ல சீர். (௨௩௩)

வேதப் பொருளை விளக்கிவைத்தா னுனதுவாச்
சாதல் பிறப்பில்லாச் சற்குருதான்—காதலுடன்
கண்டேன் களித்தேன் கலந்தமுத வாரிதனை
யுண்டேன் பிறவியொழித் தேன். (௨௩௪)

ஆன்ற தெரிவதனை யாற்ற மிகவுணர்ந்து
தோன்று மிருமைத் தொடக்கறுத்தேன்—சான்றுருந்
தானதுவாய் நின்ற தகுமமிர்த தேசிகன்பால்
யானடைந்து போற்றி யமைந்து. (௨௩௫)

சித்தநிலை தாண்டித் தெரிசித்தே ஞானகச்
சுத்தமுடனீதன்றிச் சொல்லறியேன்—சத்தியமாப்
பித்தருணர் வாரோ பெருவெளியாஞ் சோதிதனை
யத்த னருளா லறிந்து. (உ௩௬)

ஈசன் பலன்றருவா னின்பாத் திரிகாரண
மாசற் றிருந்தே யருச்சித்தா—னேசமுறு
மாசான சீவ னதுபெறுவா னென்பவெலா
மாசான சங்கற்ப மாண்பு. (உ௩௭)

சின்னமட மங்கையுடன் சேர்ந்தசுக நோரகு
மன்னுஞ்ச மாதியினில் வாய்க்குமின்ப—முன்னுமது
தன்னிற் றெளிந்து சமாதியுற்றார்க் கேதெரியு
மென்னிற் பிறரறிவ தெங்கு. (உ௩௮)

தானகுந் தன்னிலையிற் றானகவே யிருக்கிற்
றானகு மெவ்வுயிருந் தத்துவமு—மூனமின்றி
யோர்ந்துதா னகுநிலை யொண்மறைகூ றும்வழியாற்
றேர்ந்திருப்ப ரேதற் சிவம். (உ௩௯)

முன்செய்த புண்ணியத்தான் முற்றுமெண நல்லறிவு
சென்மத் திறமறிந்தார் செப்பினரால்—சென்மமது
கன்மத்தா லாவதனல் கர்மக் கரியானற்
றன்மயமா கும்மோனஞ் சார்ந்து. (உ௪0)

தற்பரமாஞ் சிற்பரத்தைச் சற்குருவாற் கண்டுணர்ந்தேன்
பற்பலநூ லிங்கொன்றும் பார்த்தறியே—னற்புதமாய்
நாடும் பிரமநிலை நானென்ப தென்றறிந்தேன்
றேடுநிலை யொன்றுமிலை தேர்ந்து. (உ௪௧)

தூங்கி விழிக்குந் தொழில்கொண்ட பண்டிதரே
யாங்குசுக மெத்தகைய தாய்ந்தறிமின்—தூங்கியே
தூங்காது மூன்றவத்தை சோராது சோர்வின்றி
வாங்காது பார்த்தால் வரும். (உ௪௨)

தடியுடலை நுண்ணுடலைச் சாரே துடலை
மடிகொண்டு நானென்னன் மாண்போ—விடிலிவற்றை
நானென் பதுவிளங்கு நான்றானு நின்றநிலை
தான்சிவமா குஞ்சத்யந் தான். (உ௪௩)

மதியின் மயக்கன்றி மாயையெங்கே சொன்மின்
மதியின் மயக்கறுத்தான் மாயை—பதியோடு
நிற்குமிடங் காணுது நீள்கனவு போலழியும்
பொற்பா நிலையாம் பொலிந்து. (உ௪௪)

கோசமெனும் பஞ்சதனைக் கூறறிவாந் தீயதனா
னாச முறக்கொளுத்தி னன்னிலையாம்—பாசமுள
தாசனெனுந் துக்கந்தான் றங்காது விட்டொழியு
மாசகலு நற்சிவமாம் வாய்ந்து. (௨௪௫)

உணர்வானைத் தேகமென லூகமதற் கொவ்வா
துணர்வானைத் தேர்ந்திங் குணர்மி—னுணர்வா
னுணருருவ நற்சிவமென் றோர்ந்தறியி னன்றே
யுணர வாராதுலக முற்று. (௨௪௬)

உணர்பவனா யேயிருந்து மூனுடலைத் தானென்
றுணர்வினா லோதுதலொப் பாமோ—வுணரா
றுணர்வானை விட்டெதனை யோரினுமென் னாகு
முணர்வானா ரோரீ ருகந்து. (௨௪௭)

உணர்வு முடலு முறவின்றி நிற்ற
லுணருங் கனவா லுணர்ந்தும்—வணமா
றுணர்வானைக் காணா தழலலெனே சொல்வீ
ருணர்வான் மயமா முலகு. (௨௪௮)

தன்னைத் தவிரவிலைச் சங்கற்ப மென்றுணர்ந்தான்
முன்னை வினையின் முடிச்சவிழுங்—கொன்னாய்ப்
படிக மடமதனைப் பார்த்தே குரைக்குஞ்
செடிபடுவ ரங்ஙன் சினந்து. (௨௪௯)

நானென்ப தோராது நானென்பீ ரூனுடலை
நானென் பதுசோதி நல்லுணர்வாந்—தானொழிந்து
தானான தற்பதத்திற் றங்கி யுபாதியற்றா
னானென் பதுவிளங்கு நன்கு. (௨௫௦)

பதிபசுபா சங்கடமைப் பார்க்கினிலை வேறா
யிதிகாச மீதே வியம்பும்—விதியாக்
கதியடையக் காதலுற்றோர் கண்ணிலிது காண்பார்
நிதிதேடும் வல்லவர்போ னின்று. (௨௫௧)

பிறப்புப் பிணிமூப்புப் போரச்சாக் காடு
மறுக்குநெறி யாக்குமுத மன்னு—மிறப்பவெனப்
பன்னினா ருத்தமர்கள் பல்காலு நிட்டைசெயன்
மன்னினார்க் காநந்த வாய்ப்பு. (௨௫௨)

அஞ்ஞானம் போக வறைந்திடுவன் சாதனத்தை
யெஞ்ஞான்று மேகத் திசைவாக—செஞ்சான்றா
மெய்ஞ்ஞான வோர்மொழியான் மேவி யிருப்பதுவாம்
பொய்ஞ்ஞான மெங்காம் பொலிந்து. (௨௫௩)

மண்ணிற் பலவாய் மருவுகடம் போலுணர்வி
லெண்ண விலாவுலக மேயுமாற்—றிண்ணமுட
னுண்ணடி நம்மையன்றி யோருலகு மில்லையெனக்
கண்ணுவார்க் கில்லை கலி. (உருச)

(௯௬) திருவடித் தியானஞ் செயும்வகை செப்பல்.

வாக்குமனம் வேறுபட்டு வத்துநிலை பொய்யென்பார்
காக்குநிலை காணுக் கயமையோர்—தேக்குநிலை
மோக்கநிலை நீயென்றென் முன்னின்ற முத்தாடி
நோக்கிநினைக் கின்றே னுனித்து. (உருரு)

(௯எ) சிவதரி சனத்தின் செந்நெறி கூறல்.

உருவ மருவமிலா தோங்குசிவந் தன்னைப்
பருவமிலாப் போலியெங்ஙன் பார்ப்பா—னருமைத்
திருவுருவா மைந்தெழுத்தைச் செப்பாதே செப்பின்
பருவமுற்றுப் பார்ப்பான் பரம். (உருசு)

(௯அ) கிருத கிருத்திய னென்பது கிளத்தல்.

பஞ்ச விடயப் பகுப்புக்கா னற்சலம்போற்
றஞ்சமற நிற்குமெற்குத் தான்றோன்ற—வெஞ்சலுறு
செய்வனவெ லாஞ்செய்து தீர்த்தேன்பே ரானந்த
நய்வகையி லாதடைந்தே னுன். (உருஎ)

(௯௯) முடிவுரை.

என்னேட்டி லுள்ளபடி யிங்கிசைத்தே னிந்நூலை
யன்னியவேட் டார்க்கீ தமையாது—பன்னியவித்
தன்னேட்டி லில்லாது சாற்றவிலை பின்னொன்றை
மன்ன விரித்துரைத்தேன் மாண்பு. (உருஅ)

என்னைத் தவிரவிங் கேதுமிலை சத்தியமா
யுன்னிமதித் திந்நூலை யோதினே—னன்னதிலே
முன்னிலையாய்ச் சொல்லி முழுவதுமே யானேற்றே
னன்னியமொன் றில்லாத தால். (உருகூ)

உங்களிலே யானொருவ னேங்கறிவா யுற்றறிந்தேன்
பங்கமற நீங்களுமப் பாங்கறிந்தால்—கங்கைசடை
யண்ணல் கழலாணை யாநந்த மாவதுண்மை
திண்ணமுறக் காண்பீர் தெளிந்து. (உசுo)

போதவிளக்கம் முற்றுப்பெற்றது.

பாயிரமுட்படச் செய்யுள் – உஎஅ.

ஓம்
தத்சத்.
பரப்பிரஹ்மணேநமஃ

ஆத்மானுசந்தானக்கிரமம்.

விவேகசட்கம்.

அனித்திய பூதத் தேகநா னன்று
விந்தியத் தரங்கநா னன்று
நனித்தவாங் காரப் பிராணவர்க் கங்க
ளன்றுநற் புந்தியு மன்று
தொனித்திடுந் தார மனைசெல்வங் களுக்குத்
தூரமாஞ் சாட்சிநா னென்றுந்
தனித்துநித் தியமாய்ப் பிரத்தியகான் மாவாந்
தற்பதப் பொருளதாஞ் சிவோகம். (க)

உற்பவன் விருத்த னன்றுநா னோர்கா
லத்தினு நசிப்பவ னன்று
அற்பமாந் தேக காரிய மான
வவையெலா மகங்காரத் தல்லாற்
றற்பத வடிவாஞ் சின்மய மான
வெனக்கிலை சகளநிட் களமா
யெப்புறத் தேனு மெல்லையற் றிருக்கு
மின்பசிற் சொரூபமாஞ் சிவோகம். (உ)

சத்திய ஞாநா நந்தமாம் பிரமத்
துதித்திடு மாயையிற் சனித்த
மெத்துமிவ் வுலகஞ் சேதனத் திடையே
நசிக்கும தேதென விளம்பிற்
றத்துசொப் பனமுஞ் சுழுத்தியி லசத்தாந்
தன்மைபோற் சத்திலா திருக்குஞ்
சுத்தபூ ரணமாய் நித்திய மாகித்
துலங்கிய சொரூபமாஞ் சிவோகம். (ங)

பழுதைதன் னிடத்திற் பாம்புதோன் றுதல்போற்
பரப்பிர மத்திடை யதனிற்
கழிதரு மஞ்ஞா னத்தினாற் சீவ
னுதித்திடக் கண்டவ னொருவன்
பழுதையென் றதனாற் சர்ப்பமோர் கழும்போய்ப்
பழுதையாய்க் கண்டது போல
வழிவிறே சிகனர் சீவனீ யன்றென்
றறைந்திட வாகினேன் சிவோகம். (௪)

எமக்குமன் னியமா முலகமொன் றில்லை
யெவ்வுல கங்களெம் மிடத்திற்
சமித்துவுற் பவமா மாதலான் மாயை
வடிவம தேதெனிற் சாற்ற
வமைத்தகண் ணாடி விம்பமா நிழல்போ
லடங்கியெம் மிடத்தினில் விளங்குந்
தமத்துவ மில்லாச் சச்சிதா னந்த
தற்பத விமலமாஞ் சிவோகம். (௫)

சாக்கிர மதனி லிந்திரி யங்க
டமக்குமேற் சாட்சியாஞ் சிவோகம்
தேக்குசொப் பனத்தி லுலகரூ பமதாய்ச்
செய்மனச் சாட்சியாஞ் சிவோகம்
தாக்கிய சித்த நாசமாஞ் சுழுத்தி
யவத்தையிற் சாட்சியாஞ் சிவோகம்
நீக்கமி றுரியா னந்தமாஞ் சர்வ
நிர்மல சாட்சியாஞ் சிவோகம். (௬)

வாழி.

அத்துவித சோச்சொருப மாப்தர்திருத் தாள்வாழி
நித்த மறைவாழி நீள்புகழார்—சுத்தமுறு
சச்சிதா நந்தனடி தான்வாழி வாழியே
மேச்சுமை யாக்கண்ணு மே.

முற்றுப்பெற்றது.